VEDABHARATHI SEITHIGAL (Tamil Monthly Magazine)
REGD No. : TN/CC(S)DN/571/18-20 RNI No : TNTAM/2016/73726
TN/PM G (CCR) / WPP 605/19-20 / Valid from 28.02.2019 to 31.12.2020
1-7th (1st Week) Every Month




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜீவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829 | 78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To
Printed Matter

If not delivered please return to
VEDABHARATHY
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.

# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்

| மலர்:4 | இதழ்:2 | நவம்பர்:2019 | ரூ.10/– | வருட சந்தா:ரூ.100/– |
|---|---|---|---|---|
| Volume:4 | Issue:2 | November:2019 | Rs.10/- | Annual Subs: Rs.100/- |



அன்புடையீர்

ஏழை புற்றுநோயாளிகளை காக்கும் மாபெரும் பணியை தொடர்ந்து இருபது ஆண்டுகளாக செய்து வரும் 'ஸ்ரீ மாதா ட்ரெஸ்ட்' நம்ம தர்ம சாலாவில்

*12.12.2019 வியாழன் மாலை 6.00 மணிக்கு*

## கூட்டுப்பிரார்த்தனை

## தாயே 'சக்தி கொடு'

## 'ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம்

## 'ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம்

**நம்ம தர்ம சாலா**

இடம்: நெ.9, யோகி கார்டன், ஸ்ரீராம் நகர்,
அடையார், ஐ.ஐ.டி காம்பவுண்ட் அருகில்
பள்ளிப்பட்டு மெயின் ரோடு, சென்னை - 113.
போன் : 044-45098647

பயன் எண்ணாமல் உழைக்கச்சொன்னான்
பக்தி செய்து பிழைக்கச் சொன்னான் - பாரதி

மேலும் தொடர்புக்கு : 9444060346

நிகழ்ச்சி ஏற்பாடு
**வேதபாரதி**, சென்னை,
செல்: 94434 95950




# இமைப் பொழுதில் கண் முன் உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB TRUST AND EXCELLENCE SINCE 1904

**சிட்டி யூனியன் பேங்க்**

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078
Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

G-2, Vijay Builders, Plot No.24, Kandaswamy Nagar, 9th Cross Street,
Palavakkam, Chennai - 600 041, India.
Mobile : 98407 44400, 94450 73431, 98400 45776
Email : sreedhar.apkt@gmail.com Website : www.dharmaa.org



**ஸ்ரீ காஞ்சி**
**மஹா ஸ்வாமிகளின் அருளுரை**
**தெய்வத்தின் குரல் 3ம் பாகம்**
**அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்**
**இது தான் அச்வமேதம்**

*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்ம**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

***DONATE LIBERALLY TOWARDS CORPUS FUND***


Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39, Millers Road, Kilpauk, Chennai - 600 010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 42.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**



# வேதபாரதி
**செய்திகள்**



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்**
மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

இனி இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் வேதமந்திரங்களையும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.

**த$_1$ப$_1$ஸா ப்$_3$ரஹ்ம விஜிஜ்ஞாஸஸ்வ, த$_1$போ$_1$ப்$_3$ரஹ்மேதி$_1$|**
**தை$_1$த்$_1$தி$_1$ரீயோப$_1$நிஷத்$_1$**

*பொருள்:*

*தவத்தினால் ப்ரம்மத்தை அறிந்து கொள் தவம் தான் ப்ரம்மம்.*

*ஆத்ம ஞானம் அடைவதற்கு தவம் தான் முக்கிய ஸாதனம் தவத்தினால் தான் ப்ரம்பத்தை அறிய முடியும் தவத்தில் புலனடக்கம் மனவடக்கம் ஸத்குரு ஸேவை எல்லாம் அடங்கியுள்ளன குருவின் உபதேசங்களைச் சிந்தனை செய்து உண்மைப் பொருளை அறிவதே தவம்.*

*//ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி://*

**வேதபாரதி செய்திகள்**
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 4 இதழ்: 2

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை,
கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

**புத்தகக் குழு**

ஸ்ரீ டி. சூரியநாராயணன்
ஸ்ரீ ஸ்ரீகாந்தன்
ஸ்ரீ G.விஸ்வநாதன், Vly
ஸ்ரீ விஸ்வநாதன், Ngr
ஸ்ரீ K. ராமன்
ஸ்ரீ மணிசங்கர்
ஸ்ரீ சங்கர்
ஸ்ரீ S. கிருஷ்ணமூர்த்தி
ஸ்ரீ M.V. சுப்ரமணியன்
ஸ்ரீ K.N. பத்மநாபன்
ஸ்ரீ சாந்தா நாகராஜன்
ஸ்ரீ K. நாராயணன்
ஸ்ரீ நடராஜன்
ஸ்ரீ K. ஸ்வாமிநாதன்
ஸ்ரீ V. ஸ்ரீராம்

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**

## புத்தகத்தின் உள்ளே

| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு | 5 |
| அட்டைப்பட விளக்கம் | 7 |
| நம்பிக்கையே இறையருள்தரும் சிருங்கேரி மஹா சுவாமிகள் | 9 |
| அருளியவை | 13 |
| சுபாஷிதம் | 15 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 16 |
| கார்த்திகை மாத விசேஷங்கள் | 20 |
| புதுவை வேதபாரதி ஆண்டுவிழா | 21 |
| பிரதக்ஷிணம் | 37 |
| பழமொழிகளும் அர்த்தங்களும் | 40 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 42 |
| தருமத்தின் குரல் | 44 |

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.100 |
| ஆயுள் சந்தா | ரூ.1500 |

சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை மேற்கண்ட அலுவலக முகவரிக்கு அனுப்பவும். சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

வங்கி மூலம் புத்தக சந்தா நன்கொடை வழங்கிட
**VEDABHARATHI**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**
**REGD No : TN/CC(S) / DN / 571 / 18-20**
**RNI No : 1282188**
**Title Code : TNTAM/2016/73726**
**R.Dic.No.1845/2015**
**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
**1-7th (1st Week) Every Month**
**TN/PM G (CCR) / WPP 605/19-20 /**
**Valid from 28.02.2019 to 31.12.2020**



# ஒரு நிமிடம் உங்களோடு




**Ego** ஆணவம், அகந்தை, அல்லது அஹங்காரம். இந்த வார்த்தையை நாம் எல்லோருமே பல சந்தர்பங்களில் பயன்படுத்துகிறோம்.

பொதுவாக நமக்கு ஏதாவது வேண்டுமானால்தான் பகவானை வேண்டுவோம். இல்லையானால் பகவானின் ஞாபகம் வராது. தினமும் சமைக்கும்போது யாரும் பகவானை வேண்டுவதில்லை. காரணம் சமைப்பதற்கான பொருட்கள் எல்லாம் சமயல் அறையில் இருக்கிறது. ஏதாவது தேவையானால் பகவானை வேண்டுவோம். அப்போது நாம் தாழ்வானவன் பகவான் உயர்ந்தவர். இது தான் மனிதனின் கற்பனை. நம் உள்ளே உள்ள ஈகோதான் நம்மையும் பகவானையும் வேறுபடுத்துகிறது. பகவான் நம்மை விட்டு வெளியேறுவது என்பதன் சுருக்கம்தான். Ego (Ending God Out)

ஈகோ உள்ளவர்கள் எப்போதும் தன்னைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருப்பார்கள். இவர்களிடம் சுயநலம், வறட்டுக் கௌரவம், உயர்வு மனப்பான்மை, தலைக்கனம், பணிவின்மை ஆகிய குணங்கள் நிறைந்திருக்கும். இவர்கள் அதிகம் பேசமாட்டார்கள். நம்மை நாடியே பிறர் வரவேண்டும் என்று இருப்பார்கள். தன்னைவிட மற்றவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்று நினைப்பார்கள். தான்தான் சிறந்தவன் மற்றவர்களுக்கு எதுவும் தெரியாது என்ற எண்ணம் உள்வர்கள். மற்றவர்கள் தன்னை புகழவேண்டும், மதிக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். அடுத்தவர்கள் நிலைமையைப் பார்த்து பொறாமை படுவார்கள் இவர்கள் பேச்சில் இரக்க குணம் இருக்காது. தன்னைவிட குறைந்த படிப்பு, பதவி உள்ளவர்களிடம் அதிகம் பேச மாட்டார்கள். தவறு செய்தால் மன்னிப்பு கேட்கமாட்டார்கள். தனக்கு

தோல்வி வந்துவிடுமோ என்கிற பயம் இருக்கும்.

ஒரு பெரிய நாட்டை ஒரு அரசன் ஆண்டு வந்தான். அவன் "தான்" என்ற அஹங்காரம் நிரம்பியவனாக இருந்தான். ஒரு நாள் அவன் வேட்டைக்குச் சென்றபோது ஒரு துறவியை சந்தித்தான். அவரிடம் "நான் பல நாடுகளை வென்ற சக்ரவர்த்தி இருப்பினும் எனக்கு நிம்மதி இல்லை. எனக்கு மகிழ்ச்சி கிடைக்கவேண்டுமானால் நான் என்ன செய்யவேண்டும்" என்று அவரிடம் கேட்டான். தியானத்திலிருந்து கண் விழித்த அந்த துறவி சற்று கோபமாக "நான் அழிந்தால்தான் உனக்கு சந்தோஷம் கிடைக்கும்" என்று கூறிவிட்டு மீண்டும் கண்மூடி தியானத்தில் ஆழ்ந்துவிட்டார். துறவி தன்னை அவமானப்படுத்திவிட்டார் என்று நினைத்த அரசன் கோபத்தில் துறவியை கொல்வதற்காக தன் கத்தியை உருவினான். அப்போது துறவி "அடே மூட அரசனே "நான்" என்று நான் என்னைச் சொல்லவில்லை. உன் உள்ளே இருக்கும் "நான்" என்ற அகந்தை அழிந்தால்தான் நீ மகிழ்ச்சி அடைவாய் என்று கூறினேன் என்றார்.

நம்முடைய உள்ளே உள்ள அந்த ஈகோ விலிருந்து விலகி நிற்க நமக்கு சத்தியும் பலமும் நம்மிடையே உள்ளது. நம்முடைய ரிஷிகள் கண்டுபிடித்தது "நம்முடைய ஈகோவிற்கு நிறந்தரமான இடம் நம் மனதில் கிடையாது. அது நம்முள்ளே வந்து வந்து கோகிறது. ஆனால் நம்முடைய பலவீனத்தால் அந்த ஈகோ நம்மிடையே எப்போதும் ஒட்டிக்கொண்டே இருக்கிறது. ஈகோவை விட்டுவிட்டால் வாழ்வு லேசாகிவிடும். அதனால் எவ்வளவுக்கெவ்வளவு நாம் ஆன்மீகத்தில் ஈடுபடுகிறோமோ அவ்வளவு நாம் நம்முடைய அகந்தையிலிருந்து, அதாவது ஈகோவிலிருந்து விலகி நிற்கலாம். நம்முடைய எல்லா பிரச்சனைகளுக்கும் காரணம் இந்த ஈகோ தான். இதை நாம் உணர்ந்தால் அப்போது அந்த ஈகோ நம்மை விட்டு போய்விடும்.

நண்பர்களுக்குள் ஈகோ வந்தால் நட்பு கெட்டுவிடும். கணவன் மனைவிக்குள் ஈகோ வந்தால் வாழ்க்கை கெட்டுவிடும்.

இந்த "ஈகோ" என்னும் தலைக்கணம் நமக்குத் தேவையா?

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**



# அட்டைப்பட விளக்கம்

கங்கை நதிக்கரையில் 'சமத்காபுரம்' என்ற நகரில் அந்தணர் குலத்தைச் சேர்ந்த பிரம்மரதர் - சுநந்தா தம்பதியினர் வாழ்ந்து வந்தனர். நீண்ட காலம் ஆகியும் அவர்களுக்கு புத்திர பாக்கியம் அமையவில்லை. எனவே பிரம்மரதன் ஸ்ரீமந் நாராயணனை தியானித்து புத்ர பாக்யம் வேண்டி நீண்ட நாட்கள் தவம் இருந்தார். அவருடைய தவத்தை மெச்சி அவர் முன் தோன்றிய ஸ்ரீமந் நாராயணனிடத்தில் பிரம்மரதர் "எல்லாக் கலைகளிலும் வல்லவனாகவும், மிகச் சிறந்த ஞானமும், நற்குணங்களும் கொண்ட ஒரு பிள்ளை பிறக்க அருள்புரிய வேண்டும்" என்று கேட்க ஸ்ரீமந் நாராயணன் தானே வந்து அவதரிப்பதாக வரம் தந்து மறைந்தார். கார்த்திகை மாத சுக்லபக்ஷ த்வாதசீயன்று சதயநக்ஷத்திரத்தில், தனுர் லக்னத்தில் ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ரீமந் நாராயணன் - சுநந்தாவிற்கு குழந்தையாக அவதரித்தார். குழந்தையை காணவந்த மஹரிக்ஷிகளும், ஞானிகளும் குழந்தை யக்ஞுங்களுக்கு ஆதாரமாக விளங்கும் வேதங்களை ஓதுவான் என்று பொருளில் "யாக்ஞவல்கியர்" என்று பெயர் சூட்டினார். பிருகஸ்பதியே குருவாக அமைந்து குழந்தைக்கு நான்கு வேதங்களையும் சகல கலைகளையும், சாஸ்திரங்களையும், கற்பித்து உபநயனமும் செய்து வைத்தார். "யாக்ஞவல்கியர்" வியாச பகவானிடம் வேதஹஸ்யங்களை கற்றார். பின்னர் இவர் ''வைசம்பாயன'' மஹரிஷியின் சிறந்த சிஷ்யராக திகழ்ந்துஅவரிடம் யஜுர் வேதத்தைக் கற்றார். ஒரு சமயம் குரு சிஷ்யரிடையே பெரும் வேற்றுமை தோன்றவே குருவை விட்டு விலகிவிட்டார். ஆனால் தன்னை விட்டு விலகும் முன் தன்னிடமிருந்து கற்ற வித்தை (வேதம்) அனைத்தையும் திரும்ப தந்துவிட்டுச் செல்லவேண்டும் என்று உத்தரவிட்டார் வைசம்பாயனர். "யாக்ஞவல்கியர்" ரஜோகுணமும் கலந்த ரிஷி. குரு இப்படி கட்டளையிடவே "யாக்ஞவல்கியர்" அவரிடம் கற்ற யஜுர் வேதத்தை தத்தம் செய்துவிட்டு "அதை நான் ஒரு பொழுதும் உபயோகிக்க மாட்டேன்" என சத்தியம் செய்து கொடுத்துவிட்டு வெளியேறினார். இவ்விதம் வெளியேறிய "யாக்ஞவல்கியர்" காயத்ரி தேவியை உபாசனை செய்து கடும்

தவமிருந்தார். அவருடைய வழிகாட்டுதலின்படி சூரியபகவானை நோக்கி தவமிருக்க சூரியபகவான் அவரைத் தன் சீடனாக ஏற்று அவருக்கு ரகசியமான வேதபாகங்களையும், உபநிஷதங்களையும், யஜுர் வேதத்தின் ஒரு பகுதியையும் உபதேசம் செய்தார். இவற்றின் சாரமே 15 சாகைகளைக் கொண்ட ''சுக்ல யஜுர் வேதமாக'' பின்னாளில் ''யாக்ஞவல்கியரால்'' அறிமுகப்படுத்தப்பட்டது. ''யாக்ஞவல்கியர்'' சுக்ல யஜுர் வேதத்திற்குத் தனி பிரமாணத்தையும் எழுதினார். இதற்கு "சதபதபிரமாணம்" என்று பெயர். அவர் ஒரு "ஸ்மிருதி" யையும் இயற்றினார். இதற்கு "யாக்ஞவல்கிய ஸ்மிருதி" என்று பெயர். இது ஹிந்து தர்மசாஸ்திரம், சட்டம் முதலியவற்றை விவரிக்கிறது. இதுவே இன்றும் நீதிமன்றங்களில் எடுத்துக்காட்டாகப் பயன்படுகிறது. சட்டப்படிப்பிற்கும் ஒரு நூலாகும். இதனால் இவர் வேதகால சட்ட வல்லுநராகப் போற்றப்படுகிறார்.

இவர் மைத்ரேயி, காத்யாயனி என்ற இரு மனைவியருடன் நிறைவான இல்வாழ்க்கை வாழ்ந்தபின் துறவு பூண்டார். இவர் எந்த நெருக்கடியையும் சமாளித்து வெற்றி காண்பதில் சமர்த்தர். மனோதிடம், புத்திக் கூர்மை, சத்யம், தர்மம் ஆகியவற்றில் ஈடுபாடு முதலிய பல நற்குணங்கள் இவரிடம் பிரகாசித்தன. இதனால் இவரை யோகீஸ்வரர் என்று அழைப்பார்கள். மஹரிஷிகளில் உயர்வானவர். முனி ஸ்ரேஷ்டர். இவரது பெருமைகளைப் போற்றும் வகையில் ஒவ்வொராண்டும் இவரது ஜயந்தி நாள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

சென்னை பழைய பல்லாவரம், பெருமாள்கோயில் தெருவில் ஸ்ரீயாக்ஞவல்கிய மஹரிஷிக்காக ஒரு மகத்தான ஆலயம் கடந்த 2000ம் ஆண்டு அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு "யாக்ஞவல்கியரின் ஜயந்தி தினம் 0911.2019 சனிக்கிழமை நிகழ உள்ளது. நாமும் அவர் அவதரித்த அந்த நன்னாளில் அவரை ஸ்துதித்து நமஸ்கரித்து அனைத்து மங்களங்களையும் அடைவோமாக.

தொகுப்பு
**டி.சூரியநாராயணன்**



# நம்பிக்கையே இறையருள் தரும்

நம்பிக்கைதான் வாழ்க்கை என்பது எல்லோருக்கும் தெரியும். அசைக்க முடியாத நம்பிக்கை மட்டுமே இறையருள் தரும் என்பது எத்தனை பேருக்குப் புரிந்திருக்கிறது? சத்தியமான ஒரு அனுபவத்தின் மூலம் ஓரிரு மனங்களிலாவது அசைக்க முடியாத இறைநம்பிக்கையை ஊட்டுவதுதான் இந்தக் கட்டுரையின் நோக்கம்.

சில வருடங்களுக்கு முன் நிகழ்ந்த அற்புதமான ஆன்மீக நிகழ்வு. அப்போது நான் சியாட்டலில் (அமெரிக்கா) என் மகள் வீட்டில் இருந்தேன். அங்கே இருக்கும் நாட்களை, நடிகர் ரஜினி அமைதியை விரும்பி இமயமலைக்குச் செல்வார் என்பார்களே அதுபோல் நானும் எனக்கு கிடைத்த அமைதிக்கான வாய்ப்பாக நினைத்துக் கொள்வேன். அந்த ஊரும், மகள் வீடும் இயற்கையோடு நம்மை ஒன்றிப்போக செய்துவிடும். எழில் கொஞ்சும் அடர்ந்த காடுகள், பனி படர்ந்த மலைகள், ஓங்கி உயர்ந்த மரங்கள், திடீர் திடீர் என்று பெய்யும் விதவிதமான மழைகள், ஏராளமான நீர் நிலைகள் சொல்லிக்கொண்டே போகலாம்.

நவராத்திரி காலம் வந்துவிட்டது. எல்லோர் வீட்டிலும் பிரும்மாண்ட கொலுவும் வைத்தாகி விட்டது. காலையில் படு மார்டன் பெண்கள், மாலையில் படு பதிவிசாய் அக்ரஹார பெண்களாய் பட்டும், பொட்டும், பூவும், பொன் ஆபரணங்களுமாய் மங்களகரமாய் வலம் வந்தனர். காலையில் அலுவலகம், மாலையில் நவராத்திரி அழைப்புகளுக்குப் போவார்கள். எங்கும் ஆடம்பரம், அலங்காரம், கற்பனைக்கு மீறிய 'தீம் கொலுக்கள்' சில சமயங்களில் சினிமா செட் போட்டிருக்கிறார்களோ என்று கூடத் தோன்றும்.

இந்தச் சூழலில், எனக்கு ஒரு ஆசை வந்துவிட்டது. எல்லோரையும் அழைத்து கூட்டாக ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமத்தை என் மகள் வீட்டில் பாராயணமாகப் படித்து, வெற்றிலை பாக்கு கொடுக்க வேண்டும் என்று. என் பெண் மிகவும் தயங்கினாள். சரியாக வராது என்றாள். யாருக்கும் அவ்வளவு நேரம் இருக்காது, சிரத்தையும் இருக்காது என்றாள். "வருவார்கள், கலகலவென்று பேசி மகிழ்வார்கள், சாப்பிடுவார்கள், அடுத்த கொலுவுக்குப் போய்விடுவார்கள் அம்மா" என்று கூறிவிட்டாள். 'ஒரு ஈமெயில்

அனுப்பு, வருபவர்கள் வரட்டும்.“ என்றேன். அவளும் அனுப்பினாள். யாரிடம் இருந்தும் பதில் வரவில்லை. என் மனம் வருந்தியது. வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. ‘சத்சங்கமாய் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் சொல்லத்தானே ஆசைப்பட்டேன். அதுகூடவா நிறைவேற்ற மாட்டாய்? என்று மானசீகமாக அம்பாளிடம் பேசிக்கொண்டு நான் மட்டுமே பாராயணம் செய்ய முடிவு செய்து, ஏற்பாடுகளைச் செய்துகொண்டு அமர்ந்தேன். பூர்வாங்க மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருந்தேன்.

“அம்மா கிளம்பு. அதிசயமாய் உன் மாப்பிள்ளையே கோவிலுக்கு போகலாம் உங்கம்மாவையும் வரச்சொல்லு என்கிறார்.” என்று பரபரப்புடன் சொன்னாள் பெண். அன்று நவராத்திரி வெள்ளிக்கிழமை மாலை. அவர்கள் சொல்லும் கோவில் ரொம்பவும் தூரத்தில் இருக்கிறது. அங்கே போய்விட்டு வந்தால் பாராயணம் செய்யமுடியாமல் போய்விடுமே என்று தயங்கினேன். எல்லோரையும் அனுப்பிவிட்டு தனிமையில் நிம்மதியாக பாராயணம் செய்யலாம் என்று முடிவெடுத்து ‘நான் வரலைம்மா, ஒரு தடவையாவது எனக்கு லலிதா சஹஸ்ரநாமம் பாராயணம் செய்யணும். நீங்க போயிட்டுவாங்க’ என்று கூறிவிட்டேன். என் மகள் வற்புறுத்தாமல் போய்விட்டாள். ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம் மாப்பிள்ளை பூஜை அறைக்கு வந்து ‘ஏன் நீங்க வரலை? ஸ்லோகம் சொல்லணும்னா அங்கயே உட்கார்ந்து சொல்லலாமே. வாங்கோ நீங்களும்” என்றார். முகம் பார்த்து அதிகம் பேசும் வழக்கமில்லாத மாப்பிள்ளையே வந்து கூப்பிட்டதும் போகாமல் இருப்பது மரியாதை இல்லை என்று கருதி கோவிலுக்கு கிளம்பிவிட்டேன். ‘இன்னிக்கு என்னமோ அம்பாள் என்னை சோதிக்கிறாள்.’ என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்.

அமெரிக்க சாலையில் அதிவேக பயணத்திலும் கோவிலை சென்றடைய ஒரு மணி நேரம் ஆகிவிட்டது. காரைவிட்டு இறங்கியதும் கோவில் வாசலிலிருந்து ஒருவர் ஓடிவந்து, ‘வாங்கோ மாமி, அம்பாளா உங்களைக் கொண்டுவந்து விட்டிருக்கிறாள். சீக்கிரம் வாங்கோ. ஒரே ஒரு சீட்டுக்கு ஆள் இல்லாம லலிதா சஹஸ்ரநாமம் படிக்க முடியாம நிக்கறது. ப்ளீஸ் கொஞ்சம் சீக்கிரம் வாங்கோ” என்று பரபரத்தார்.



“இல்லை நாங்க அதுக்கு பணம் கட்டலை. சும்மாத்தான் தர்சனம் செய்ய வந்திருக்கோம்.” என்றாள் என் பெண்.

“அது பரவாயில்லைம்மா. வரவேண்டிய யாரோ ஒருத்தர் வரலை. 108 சுமங்கலிகள் இருக்கவேண்டிய இடத்துல ஒரு ஆள் குறையறது. ப்ளீஸ். அம்மாவை உக்கார வையுங்கோ. என்றார். அடுத்த சில நொடிகளில் 108 வது சுமங்கலியாக நான் அமர்த்திவைக்கப்பட்டேன். அந்த இடத்தில் மிகச்சரியாக தமிழில் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம புத்தகம் இருந்தது. அக்கம் பக்கத்தில் பார்த்தேன். கன்னடம், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி, ஆங்கிலம் என்று அவரவருக்கு சௌகர்யமான மொழியில் இருந்தது. யாரோ தமிழ்கார பெண்மணி வரயியலாமல் போய், அந்த இடத்தில் அம்பாள் என்னை இழுத்துவந்து உட்காரவைத்திருக்கிறாள்! நான் அங்கிருந்த தெய்வத்திருவுருவங்களை எல்லாம் பார்த்து பரவசப்பட்டு கண்களில் கண்ணீர் பெருக ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம புத்தகத்தை பிரித்தேன்.

ஒலி பெருக்கியில் ‘ஓம் ஸ்ரீ மாத்ரே நமஹ’ என்று தொடங்கினார்கள். 108 சுமங்கலிகளும் குங்கும அர்ச்சனையை ஆரம்பித்தார்கள். நானும்தான். கண்களில் கண்ணீர் பளபளக்க உதடுகளில் உச்சரிப்பும், உள்ளத்தில் அன்னையின் அபார கருணை கடாக்ஷத்தையும் நினைத்தபடி குங்குமத்தில் விரல்களைப் பதித்தேன்.

அர்ச்சனை முடிந்து, தீபாராதனை தரிசித்து, பிரசாதம் பெற்றுக்கொண்டு வெளியே வந்தபோது என் பெண் என் கழுத்தைக் கட்டிக்கொண்டு, கண்களில் கண்ணீர் கசிய “அம்மா, உன் ஆசையை அம்பாள் எப்படி நிறைவேற்றி இருக்காள். என்னாலேயே நம்பமுடியலைம்மா. நம் கூப்பிட்டு யாரும் வரலை, உன் மனசு கஷ்டப்படறதேன்று எனக்கும் வருத்தமா இருந்தது. இன்னிக்குன்னு பார்த்து உன் மாப்பிள்ளை மனசுல இந்தக் கோவிலுக்கு போகணும்னு தோணியிருக்கு, அதுவும் அவரே வந்து உன்னை கூப்பிட்ருக்கார், எல்லாமே அதிசயம் அம்மா. இதுக்கெல்லாம் உனக்கு இருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கைதான். அம்பாள் எப்படி நடத்தி கொடுத்திருக்கா பாரு.” என்றாள். நம்பிக்கைதான் இறையருள் தரும் என்று என் மகள் புரிந்து கொண்டதில் எனக்கு அளவற்ற மகிழ்ச்சி.

**Dr.ஷியாமா ஸ்வாமிநாதன்**

## ஸ்ரீ காஞ்சி மஹா சுவாமிகள் அருளிய
# மானஸீக பூஜையின் சிறப்பு


பகவத் பிம்பத்துக்கு, "பாபபுருஷகல்பனம் முதல் புண்யபுருஷ கல்பனம்" வரையில் கூறப்பட்ட நிலைகள் இல்லை. ஆனாலும் பூஜகரின் சரீரத்துக்குச் செய்துகொள்ளும் ந்யாஸங்கள் பிம்பத்துக்கும் உண்டு. பிம்பந்யாஸம் செய்த பிறகு ஆவாஹனம் அர்ச்சனம் முதலிய பூஜாக்கிரமங்கள் உள்ளன. ஆகவே மானஸிக அர்ச்சனத்தின் அம்சமாகிய ந்யாஸமும் பூஜாக்ரமத்தில் முக்கியமாகும். ந்யாஸத்துக்குப் பிறகு மானஸிக அர்ச்சனம். "ஆத்மாநம் நாராயணம் புத்வா" என்று கூறியபடி நம்மை ஸாக்ஷாத் நாராயணனாகவே பாவித்துக்கொண்ட பிறகுதான் பூஜையை ஆரம்பிக்க வேண்டும்.

பூஜகர் தம்முடைய சரீரத்தைப் பகவத் ஸ்வரூபமாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்றால் அந்தச் சரீரம் புண்ய சரீரமாக ஆகிவிட வேண்டும். சாதாரண பாப சரீரமாக இருந்தால் அந்தப் பகவத் ஸ்வரூப பாவனாரூப எண்ணம் உதிக்காது என்பது மஹரிஷிகளுடைய அபிப்பிராயம். ஆகவே, பூஜா விதியில் சொன்னபடி பூஜகர் தம்முடைய சரீரத்தைப் புண்ணிய சரீரமாகச் செய்துகொண்டு, பிறகு தம்மை ஸாக்ஷாத் நாராயணனாகப் பாவித்துகொண்டு பிறகுதான் மானஸிக அர்ச்சனம் செய்ய வேண்டும்.

கூட்டங்கள் நடக்கும்போது நிகழ்ச்சிநிரலில் உள்ள உபந்நியாசகர்கள் என்ன என்ன சொல்லப்போகிறார்கள் என்பதைத் தலைவர் முன்கூட்டியே சுருக்கமாகச் சொல்லுவார். அதைப் போலவே பூஜாக்கிரமத்திலும் மேலே நடக்கக்கூடிய பூஜை என்ன என்ன உபசாரங்களோடும், எவ்வளவு விமரிசையாகவும், எவ்வளவு அழகாகவும் நடைபெறும் என்பதை முன்கூட்டியே பூஜகர் தம்முடைய மனத்தில் பகவானைத் தியானித்து ஆராதித்துக் கொண்ட பிறகு பூஜை செய்ய வேண்டும். இந்த மானஸிக அர்ச்சனத்தில், தம்முடைய மனத்தில் பகவத் ஸ்வரூபத்தை நன்றாகத் தியானித்துக்கொண்டு எல்லா உபசாரங்களையும் செய்துகொள்ள வேண்டும். (தொடரும்)



## சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை
# இதயத்தில் வசிப்பவர்



பாண்டவர்களுள் மூத்தவரான யுதிஷ்டிரா, கௌரவரான துரியோதனனோடு சூதாட்டம் விளையாடுவதற்கு ஒப்புக்கொண்டார். ஆட்டம் செல்லச் செல்ல யுதிஷ்டிரர் தாம் பணயம் வைத்த பொருட்களையெல்லாம் இழந்து கொண்டே வந்தார். - பிறகு, தனது சகோதரர்களை ஒவ்வொருவராக பணயம் வைத்துக் கொண்டே வந்தார். கடைசியாக, புதிஷ்டிரர் திரௌபதியை பணயம் வைத்தார். மீண்டும் அவர் தோல்வியையே தழுவினார். உடனே, தீய எண்ணங்கொண்ட துரியோதனனின் ஆணையின் பேரில் திரௌபதி சபைக்கு அழைத்து வரப்பட்டாள். அவளை அவமானப்படுத்துவதற்காக துச்சாதனன் அவளது ஆடையைக் களைய ஆரம்பித்தான். தன்னைக் காப்பாற்றுமாறு எதிரே நின்று கொண்டிருந்த பாண்டவர்களைப் பார்த்து அவள் கதறினாள். அவளது உதவிக்கு வர வேண்டுமென்று அவர்கள் துடியாய்த் துடித்தாலும், அப்படி வர முடியாததொரு சூழ்நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டார்கள்.

இனி இறைவன் ஒருவரால்தான் தன்னைக் காக்க முடியும் என்று உணர்ந்த அவள், "ஹே, கிருஷ்ணா! துவாரகவாசின் (துவாரகத்தில் குடியிருப்பவனே)! எங்கே இருக்கிறாய் நீ? உடனே வந்து என் மானத்தைக் காப்பாற்று!'' என்று பிரார்த்தித்தாள். சில வினாடிகள் கழித்துத்தான் இறைவன் அவளது உதவிக்கு வந்தார். திரௌபதியும் அந்த இக்கட்டான சோதனையிலிருந்து மீண்டு வெற்றிகரமாக வெளியே வந்தாள். பிறகு, தன்னைக் காப்பதற்காக ஏன் அவர் உடனடியாக வராமல், தாமதமாக வந்தார் என்று கிருஷ்ணரைப் பார்த்து உரிமையோடு கேட்டாள். அதற்கு பகவான் கிருஷ்ணர், "துவாரகையில்

குடியிருப்பவனே என்றுதானே நீ என்னைக் கூப்பிட்டாய்? அதனால் தான் நான் உன் எதிரில் வந்து உன்னைக் காப்பாற்ற சில வினாடிகள் பிடித்தது. துவாரகையிலிருந்து நான் வர வேண்டுமல்லவா? நீ என்னை "ஹ்ருதய நிவாஸின்" (இருதயத்தில் வசிப்பவனே) என்று கூப்பிடவில்லையே. அப்படி நீ அழைத்திருந்தால் உன் உதவிக்கு நான் உடனடியாக வந்திருப்பேன்" என்று பதில் கூறினார்.

வியாசரின் மஹாபாரதத்தில் வரும் இந்நிகழ்ச்சி, இறைவன் நம் அருகிலேயே உள்ளார் என்றும், இவ்வுண்மையை மறப்பது நமக்குத் தீமையையே விளைவிக்கும் என்றும், நமக்கு நன்கு எடுத்துரைக்கிறது. எங்கேயோ வெகு தொலைவில் உள்ள வைகுண்டத்திலோ அல்லது கைலாசத்திலோதான் இறைவன் வீற்றிருப்பதாக பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் உள்ளே இருந்து கொண்டு எல்லோரையும் தூண்டிக் கொண்டிருப்பவர் அவர்தான்.

"புத்தியில் வசிப்பவரும், புத்தியுள் இருப்பவரும், எவரை புத்தி அறியவில்லையோ, எவர் புத்தியை தேகமாகக் கொண்டுள்ளாரோ மற்றும் உள்ளேயிருந்து எவர் புத்தியை ஆட்டுவிக்கிறாரோ, அவர்தான் அந்தர்யாமி அல்லது உள்ளே ஆள்பவர் என்று அழைக்கப்படுகிறார்; அவர்தான் அழியாத உன்னுடைய ஆத்மா" என்று ப்ருஹதாரண்யக உபநிஷத்து இறைவனைப் பற்றி நமக்குச் சொல்லிக் கொடுக்கிறது.

தொடரும்...

உ
குருவே சரணம்

**வேதபாரதயின் குறிக்கோள்**

- ★ அந்தண சிறுவர்களுக்கு ஸந்த்யா வந்தன பயிலரங்கம்.
- ★ பெண் குழந்தைகளுக்கு 'யுவஸ்ரீ' வாழ்வியல் பயிலரங்கம்
- ★ நன்னெறி வகுப்புகள்
- ★ ஸ்வதர்மஸ்ரீ வகுப்புகள்

புத்தக வடிவமைப்பு
**ரெம்ஸ் பிரிண்ட்ஸ்**
1, லட்சுமிநகர், 100 அடி சாலை, வேளச்சேரி, செ - 42. செல்: 8939000064



## சுபாஷிதம் - 12

"சுபாஷிதம் என்பது சொல்வதற்கு இனிமையான ஸ்லோகங்கள். இத்தகைய ஸ்லோகங்களின் பொருள் எவரையும் கவரும். சிறு குழந்தைகளுக்கு இத்தகைய நல்லுரைகளை கற்றுத்தருவதால் எதிர்காலத்தில் அந்த மாணவனின் மனவளம் செம்மையாக அமைவதோடு அவன் பலருக்கு வழிகாட்டியாக எடுத்துக்காட்டாக விளங்குவான்.

**அரௌ அபி உசிதம் கார்யமாதித்யம் க்ருஹமாகதே**
**சேத்து: பார்ச்வகதாம் சாயாம் ந உபஸம்ஹரதே த்ரும:**

இல்லம் தேடி வந்தவன் எதிரியானாலும் விருந்தினனாய் மதிக்கப்பட வேண்டும். தன்னை வெட்ட வருபவனுக்கு மரம் நிழலை விலக்கிக் கொள்வதில்லை.

**அதீத்ய சதுரோ வேதான் ஸர்வசாஸ்த்ராண்யநேகச:**

**ப்ரம்ஹதத்வம் ந ஜானாதி தர்வீஸூபரஸம் யதா**

நான்கு வேதங்களையும், சகல சாஸ்த்திரங்களையும் திரும்பத் திரும்ப வாசிப்பதால் மெய்ஞானத்தை அடைய முடியாது. சட்டுவம் கறிச்சுவை அறியாது.

**புதாக்ரே ந குணான் ப்ரூயாத் ஸாது வேத்தி யத: ஸ்வயம்**

**மூர்க்காக்ரேபி ச ந ப்ரூயாத் தத்ப்ரோக்தம் ந வேத்தி ஸ:**

உன் நற்குணத்தைச் சான்றோரிடம் சொல்லாதே; அவர்களே சுயமாய் அறிந்து கொள்வார்கள். மூர்க்கர்களிடம் சொல்லாதே; அவர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள்

தொகுப்பு : **பரிதி**

சுபாஷிதம் பகுதி தொடர்ந்து வெளிவர
நிதிஉதவி செய்து வருபவர்
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,**
வேளச்சேரி

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 2 பகுதி - 39

'இன்றைய டிஜிட்டல் உலகம்' எங்கள் பாதுகாப்பை மீறி பெண்கள் குழந்தைகளைத் தாக்குகிறது' என்று பொள்ளாச்சி சம்பவத்திற்கு பிறகு ஒரு தாய் கூறினாள்.

"அடிக்காதீங்கண்ணா! உன்னை நம்பித்தானே வந்தேன்" என்று அழுகுரல் 'டிஜிட்டல்' மந்திரமாக ஒவ்வொரு தாய்க்குள்ளும் புகுந்து அவள் வாழ்வு முடியும் வரை ஆட்டிப்படைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

"நாங்கள் எங்கள் பெண் குழந்தைகளிடம் பேசுவதைவிட 'டிஜிட்டல் உலகம்' தான் அவர்களிடம் அதிகம் பேசுகிறது. ஒரு பெண் குழந்தை பெற்றோர்களின் தொல்லை சிறிதுமின்றி இன்டர்நெட், ஆப்ஸ், ப்ரௌசிங்க், இன்ஸ்டா கிராம் என்று தனி உலகில் வாழும் சூழ்நிலை" என்று மற்றொரு தாய் கூறினார்.

மூன்று வயதிலிருந்தே தக்க முறையில் வளர்த்து, மாறிக் கொண்டேயிருக்கும் அவர்கள் உலகிற்குள் சென்று, புதிது, புதிதாக முளைக்கும் விஷயங்களை தானும் கற்று, அதைப்பற்றி அறிந்து, அதைப் புரிந்து கொண்டு பெண் குழந்தைகளை வளர்க்க இன்றைய தாய்மார்கள் படும் அவதிகளைப் பார்த்து நான் ஆச்சரியப்படுகிறேன்.

நான் என் மகளை வளர்க்கும் பொழுது இத்தனை அவதிகளைப் படவில்லை என்பது நிச்சயம். ஒரு தொலைபேசி மட்டுமே இருந்தது. அது ஹாலில் இருந்தது. என் மகள் யாருடன் பேசுகிறாள் என்பதை என் தாய் கவனித்துக் கொண்டிருப்பாள்.

நம் வாழ்க்கையை நாம் சற்றே திரும்பிப் பார்ப்போம். நாம் கூட அந்த வயதில் யாரோ ஒருவரின் மீது ஒரு ஈர்ப்பு கொண்டிருந்தவர்கள் தான். ஒரு சினிமா நடிகர், பாடகர் அல்லது கிரிக்கெட் வீரர் என்று அந்த தலைமுறைக்கு எந்த அளவு வெளியுலகம் தெரிந்ததோ அந்தளவு ஈர்ப்பு மனதினுள் தோன்றியது. உண்மை தானே. ஆனால் அதற்கு பெரிய களம், சுலபமாக சந்திக்கும் வழிகள் ஏற்படுத்தப்படவில்லை.

ஆனால் இன்று ஈர்ப்பு ஏற்பட்டவரிடம் தொடர்ந்து



தொடர்பு கொள்ள பல சாதனங்கள் வழி வகுக்கின்றன.

மிக, மிக சாதாரணமான ஒரு உணர்வான ஈர்ப்பு என்பது இச்சாதனங்களால் ஆழமான உணர்வாக மாற்றப்படுகிறது. பிரச்சினைகள் உருவாகின்றன.

அதனால் முதலில் நம்மிடம் பேசும் குழந்தைகளை ஆழமாக கவனித்து அவர்கள் பேசுவதை உன்னிப்பாக கவனிக்க வேண்டும்.

கண்களும், உடல்மொழியும் நமக்கு உணர்த்தும் பல விஷயங்களை அவர்களின் பேச்சு உணர்த்தாது. அவர்களுக்கு உரிய சுதந்திரம், இடம் என்று பல வீடுகளில் பல விஷயங்கள் அளிக்கப்படுகின்றன.

ஆனால் அவர்களுடைய, எண்ணங்கள், கருத்துக்கள் மற்றும் அவற்றின் பிரதிபலிப்பில் அடிப்படை நியாயம், தர்மம் உள்ளதா என்பதை நீங்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

'நீங்கள் என்ன சொல்கிறீர்கள், புரியவில்லையே' என்று நீங்கள் கேட்பதை என் 'மைன்ட் வாய்ஸ்' தெரிவிக்கிறது!

ஒரு மகள் / மகன் பல்வேறு மதத்தைச் சார்ந்தவர்களுடன் பழக வேண்டிய பள்ளிச் சூழ்நிலை. அதனால் 'எம்மதமும் சம்மதம்', 'அனைத்து மக்களும் ஒன்றே' என்று அவளுக்கு கற்றுத் தரப்படுகிறது. இதில் ஒரு தவறுமில்லை என்பதை மேலோட்டமாக பெற்றோர்கள் எண்ணுவார்கள்.

அறிவுச்சார்ந்த பெற்றோர்கள் உணர்ந்து புரிய வைக்க வேண்டிய விஷயம் ஒன்றுள்ளது. அனைத்து மதங்களும் ஒரே மாதிரியாக மக்களை வழி நடத்துவதில்லை. ஒவ்வொரு மதத்திற்கும் அதற்கென்றுரிய வழி உண்டு.

சீக்கிய மதத்தில் கத்தி வைத்துக் கொள்வது முக்கியம். தவறுகள் செய்தால் சீக்கிய கோவிலில் உழவாரப்பணி செய்தால் பாவம் தீர்ந்துவிடும் என்கிறது.

எத்தகைய குற்றம் புரிந்தாலும் 'பாவமன்னிப்பு' பெற்றால் செய்த பாவம் விலகிவிடும் என்கிறது கிறிஸ்துவம்.

மதத்திற்காக இறந்தால் 'வீர சுவர்க்கம்' என்கிறது இஸ்லாம்.

இறந்தவர்களை பறவைகளுக்கு இரையாக்குவது தான் முக்கியம் என்கிறது பார்சியர்களின் மதமான "Zoroastrianism".

ஆனால், ஹிந்து மதம் மட்டுமே இன்று பாவம் செய்தால் நாளை நீயோ அல்லது உன் சந்ததியோ அனுபவித்தே ஆக வேண்டும் என்கிறது.

இந்த முக்கியமான வித்தியாசத்தை உங்கள் குழந்தைகளுக்கு உணர்த்துங்கள்.

தொடரும்...

## வேதபாரதியின்
## நங்கநல்லூர் நவராத்திரி கொலு போட்டி

*நமது வேதபாரதியின் நவராத்திரி கொலு போட்டி 2019 நங்கநல்லூர் பகுதியில் நடைபெற்று போட்டியின் பரிசளிப்பு விழா நங்கநல்லூர் வரசித்தி விநாயகர் ஆலய வளாகத்தில் 15.10.2019 அன்று மாலை நடைபெற்றது.*

*நங்கநல்லூர் ஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்களின் ஏற்பாட்டில் ஸ்ரீவிஷ்ணு சஹஸ்ரநாமம் பாராயணத்துடன் விழா இனிதே துவங்கி, சிறுவன் சாய் கிஷோரின் பக்திப் பாடலுக்குபின் ஸ்ரீ வெங்கட்ராமன் விழா துவக்க உரை வாசிக்க, ஸ்ரீ முனீஸ்வர மாமா மற்றும் ஸ்ரீ சூரியநாராயணன் மாமா ஆகியோர் சிறப்புரையாற்றினர். தொடர்ந்து போட்டி பரிசளிப்பு நடைபெற்றது. போட்டியில் வெற்றி பெற்ற மற்றும் கலந்துகொண்ட அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவினை நங்கநல்லூர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நேர்த்தியாக தொகுத்து வழங்கினார். விழா முடிவில் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. போட்டியில் கலந்துகொண்டவர்கள் மிக்க மனநிறைவுடன் சென்றனர். விழா குறித்த நேரத்தில் துவங்கி குறித்த நேரத்தில் நிறைவு பெற்றது.*

*போட்டி நடத்த தகுந்த ஆலோசனை வழங்கிய ஸ்ரீ சூரியநாராயணன் மாமா அவர்களுக்கு நங்கநல்லூர் வேத பாரதி உறுப்பினர்கள் தங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறார்கள்.*

*போட்டி மற்றும் பரிசளிப்பு விழா நன்கு நடைபெற சீரிய பணியாற்றிய ஸ்ரீ விஸ்வநாதன், ஸ்ரீமதி சாந்தா நாகராஜன், ஸ்ரீ எம்.வி.சுப்பிரமணியன், ஸ்ரீ ரெங்கராஜன், ஸ்ரீ ஸ்ரீராம் மற்றும் அவர்கள் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அனைத்து வேத பாரதி உறுப்பினர்களுக்கும் நன்றி.*

*(ஆசிரியர்)*



## வேதபாரதியின் ஊரப்பாக்கம் கிளை மற்றும் கூடுவாஞ்சேரி அமைப்பின் அக்டோபர் மாத நிகழ்வுகள்

*12.10.2019 மாலை ஊரப்பாக்கம் ஸ்ரீ சங்கர வித்யாலயா பள்ளிக்கு விஜயம் செய்த காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீஸ்ரீஸ்ரீ விஜயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகளை ஊரப்பாக்கம் மற்றும் கூடுவாஞ்சேரி வேதபாரதி அமைப்பின் சார்பாக மைய குழு செயலாளர் திரு. ஆர். வெங்கட்ராமன் மற்றும் திரு. எம். சுப்ரமணிய சாஸ்த்திரிகள் முன்னின்று பூர்ணகும்ப மரியாதை செய்து வரவேற்றார்கள். அது சமயம் நமது செயல் வீரர்கள் மற்றும் தாய்மார்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.*

*13.10.2019 ஞாயிற்றுக்கிழமை மாலை சுமார் 3 மணி அளவில் ஊரப்பாக்கத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சங்கர வித்யாலயா பள்ளியில் ஊரப்பாக்கம் மற்றும் கூடுவாஞ்சேரி பகுதி வேத பாரதி அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்த "அந்தணர் சங்கமம்" நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவை திரு. ஆர். வெங்கட்ராமன் வேதபாரதி இதழின் ஆசிரியர் ஆலோசனை வழங்கி வழிநடத்தினார்கள்.*

*மகளிர் அமைப்பினர் நடத்திய ஸ்ரீ லலிதா சஹஸ்ர நாம பாராயண குங்கும அர்ச்சனையுடனும் செல்வி பி.ஹர்ஷா குழுவினர்களின் இறை வணக்கம் பாடலுடனும் விழா தொடங்கியது.*

*விழாவின் முக்கிய நிகழ்வாக* **"அந்தணர் சங்கமம்" தலைப்பில் ஸ்ரீ ரமண பாரதி (ஸ்ரீக்ருஷ்ண ஜகந்நாதன்ஜி)** *அவர்களின் சிறப்பு சொற்பொழிவு நடைபெற்றது. விழாவில் பெரும் திரளான அன்பர்கள், தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் கலந்து கொண்டனர்.*

*விழாவில் முக்கிய செயல்வீரர்கள் கௌரவிக்கப் பட்டார்கள். முன்னதாக திருமதி. சுதா சந்திரசேகர் வரவேற்புரை நிகழ்த்த திரு. சுவாமிநாதன் அவர்கள் விழாவை தொகுத்து வழங்கினார்கள். ஆண்டு அறிக்கையை மன்னை திரு, ஆர். நாராயணசுவாமி விளக்கி சமர்ப்பித்தார்கள். இறுதியில் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் நன்றியுரையுடன், மணிகண்டன் கேட்டரிங் உரிமையாளர் திரு. எஸ். ரமேஷ் அவர்கள் இரவு உணவு வழங்கிட விழா இனிதே நிறைவு பெற்றது. (ஆசிரியர்)*

## ஐப்பசி - கார்த்திகை மாத விசேஷங்கள்
## (நவம்பர் 1.11.2019 முதல் டிசம்பர் 16.12.2019 வரை)

*2.11.19 /ஐ 16* - ஸ்கந்த சஷ்டி, திருச்செந்தூர், சூரசம்ஹாரம்
*8.11.19/ஐ 22* - ஏகாதசி
*9.11.19/ஐ 23* - சனிப் பிரதோஷம், யாக்ஞவல்க்யர் ஜயந்தி
*12.11.19/ஐ 26* - பௌர்ணமி – கார்த்திகை கௌரி விரதம் – மஹா அன்னாபிஷேகம்
*15.11.19/ஐ 29* - சங்கடஹர சதுர்த்தி
*16.11.19/ஐ 30* - கடைமுகம்
*17.11.19/கா 01* - முடவன் முழுக்கு
*18.11.19/கா 02* - சிவ ஆலயங்களில் சங்காபிஷேகம்
*19.11.19/கா 03* - காலபைரவாஷ்டமி
*22.11.19/கா 06* - ஏகாதசி
*26.11.19/கா 10* - அமாவாசை
*8.12.19 / கா 22* - ஏகாதசி
*9.12.19 / கா 23* - பிரதோஷம்
*10.12.19/ கா 24* - அண்ணாமலை தீபம்
*11.12.19 /கா 25* - ஸர்வாலய தீபம்
*12.12.19 /கா 26* - பௌர்ணமி
*13.12.19 /கா 27* - பரசுராமர் ஜெயந்தி
*15.12.19 /கா 29* - ஸங்கடஹர சதுர்த்தி
*16.12.19 /கா 30* - தனுர் மாத பூஜை ஆரம்பம்

வேதபாரதி இதழில் வரும் கட்டுரைகள் குறித்தும், செய்திகள் குறித்தும் வாசக அன்பர்கள் தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கடிதங்கள் மூலமாகவோ அல்லது ஈ மெயில் மூலமாகவோ தெரிவித்தால் நல்ல ஆலோசனைகளை ஏற்று இதழை இன்னும் சிறப்பாக வெளியிட எங்களுக்கு ஏதுவாக இருக்கும். உடனே உங்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எழுதி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி
**வேதபாரதி - ஆர். வெங்கட்ராமன்**
எண்.31, சேஷாத்திரிபுரம் 1வது மெயின் ரோடு, பேபி நகர், வேளச்சேரி, சென்னை – 600 042.
Cell : 94434 95950 | Email - vedabharathichennai@gmail.com



# வேதபுரியில் வேதபாரதியின் முதலாம் ஆண்டுவிழா

வேதங்களை தனது சுவாசமாகக் கொண்ட வேதபுரி என்னும் புதுச்சேரியில் கடந்த 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 30ம் நாள் துவங்கப்பட்டது புதுவை வேதபாரதி. துவக்கமே மிக சிறப்பாக அமைந்தது. வேதபாரதியின் அடிநாதத்திற்கு வலுசேர்க்கும் வகையில் வேத வித்துக்களுக்கு கௌரவம் கொடுத்து அவர்களை முன்னிலைப் படுத்தி ஆரம்பமான விழா, வழக்கமான நிகழ்வுகளுடன் ஸ்ரீலலிதா சஹஸ்ரநாம பாராயணத்தோடு நிறைவுற்றது.

புதுச்சேரி வேத பாரதியின் முதலாம் ஆண்டு விழா இ.சி.ஆர் சங்கர வித்யாலயா மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் 20.10.2019, ஞாயிறு அன்று மிகச்சிறப்பாக நடந்தது. பாரத பண்பாட்டு அமைப்பான புதுச்சேரி வேத பாரதியின் முதலாம் ஆண்டு விழாவையொட்டி ரிக், யஜூர், சாம வேதத்தினருக்கான சந்த்யா வந்தன போட்டி நடந்தது. இதற்கான பரிசளிப்பு விழா மற்றும் வேத பாரதியின் முதலாம் ஆண்டு விழா புதுச்சேரி இ.சி.ஆர் சங்கர வித்யாலயா மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நேற்று நடந்தது. விழாவையொட்டி, காலை 8.00 மணிக்கு திருச்சி யோகாச்சாரியார் ஸ்ரீசந்திரசேகரன் தலைமையில், வேதபாரதியின் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு தனித்திறமைகளை வெளிப்படுத்தும் வகையில், நாடகம், யோகா, கோலாட்டம், மியூசிக்கல் சேர் உள்ளிட்ட போட்டிகள் நடந்தது. நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு வேதபாரதி செயலர் வெங்கட்ராமன் முன்னிலை வகித்தார். மதியம் 12.00 மணிக்கு பெண் குழந்தைகளின் தற்கால சவால்களும் எதிர்கொள்ளும் முறைகளும் என்ற தலைப்பில் மனநல ஆலோசகர் திருமதி.பூர்ணிமா கலந்துரையாடினார். தொடர்ந்து ‘குடும்ப உறவுகள் மேம்பட வழிகள் - முதியோர் இல்லம் ஆரோக்கியமானதா’ என்ற தலைப்பில் விவாதம் நடந்தது. மாலை நடந்த நிறைவு விழாவிற்கு புதுச்சேரி வேத பாரதி தலைவர் ரமேஷ் தலைமை தாங்கினார். துணைத்தலைவர்

பட்டாபிராமன், வேதராமன் முன்னிலை வகித்தனர். விழாவில், தினமலர் புதுச்சேரி வெளியீட்டாளர் ஸ்ரீ கே. வெங்கட்ராமன், ஸ்ரீ சங்கர் எம்.எல்.ஏ., ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று ஸ்ரீ லட்சுமி நாராயணன் உள்ளிட்ட 9 மூத்த குடிமகன்களுக்கு, சிறந்த சமூக சேவைக்கான வாழ்நாள் சாதனையாளர் விருதுகளை வழங்கினார். வேதபாரதி சொற்பொழிவாளர் ஸ்ரீ க்ருஷ்ண ஜெகநாதன் ஜி சிறப்புரையாற்றினார். விழாவில் சந்த்யா வந்தனம், பாரம்பரிய பாட்டு மற்றும் சுலோகம் ஒப்புவித்தல் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஏற்பாடுகளை, வேதபாரதியின் தலைவர் N.J.L.ரமேஷ், துணைத்தலைவர் பட்டாபிராமன், செயலர் சந்திரசேகரன் மற்றும் குழுவினர் செய்திருந்தனர். விழாவில் பங்கேற்க வேதபாரதியின் பொறுப்பாளர்கள் கோவை, மயிலாடுதுறை, ஊரப்பாக்கம், நங்கநல்லூர், வேளச்சேரி, திருச்சி போன்ற ஊர்களிலிருந்து வந்திருந்து விழாவினை சிறப்பித்தார்கள்.

வேதபாரதி புதுவை நிர்வாகிகளும், பொறுப்பாளர்களும், குழந்தைகளுக்கான போட்டிகளில் முன்னின்று நடத்திய நடுவர்களும், கருத்தரங்கம் நடத்திய பொறுப்பாளர்களும், கோலாட்டங்கள் ஏற்பாடு செய்த மகளிர் அணியினரும், ஸந்த்யா வந்தன போட்டிகள் நடத்திக்கொடுத்த பொறுப்பாளர்களும், ஜாதக பரிவர்த்தனை நடத்திய குழுவினரும், நிகழ்ச்சி முறையாக நடந்திட பலமுறை ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தி வெகு நேர்த்தியாக நிகழ்ச்சிகளை நடத்திக் கொடுத்த பொறுப்பாளர்களும் தன்னுடைய கடமையை பொறுப்பாக செய்தார்கள். தன்னார்வத்தொண்டர்களையும் வேதபாரதி புதுவை அமைப்பின் சார்பாகவும், சென்னை வேதபாரதியின் சார்பாகவும் மனமார பாராட்டுகின்றோம். இந்தப் புனிதப்பணியில் பங்கு கொண்ட அனைத்து நல் உள்ளங்களும் எல்லா நலமும், வளமும் பெற்று நீடுழி வாழ எல்லாம் வல்ல இறைவனை ப்ரார்த்திக்கிறோம்.

வேதபாரதி புதுவை கிளையின் ஓராண்டு சாதனைகள் குறித்த அறிக்கை அடுத்த இதழில் வெளிவரும். - **ஆசிரியர்**




# புதுவை ஆண்டு விழா

## மூத்த சாதனையாளர்களுக்கு முதல் மரியாதை


Sri S.V. IYER Avl


Er. R. PITCHUMANI Avl


Prof. P. BALAKRISHNAN Avl



Sri. B.VENKATA RAMANI Avl



Sri. N.VEDHARAMAN & SAVITHRI VEDHARAMAN Avl



Sri. PV. LAKSHMI NARAYANAN Avl





Dr. R.BASKARAN Avl



Sri. MV.RAMASAMY Avl



Judge. N.KRISHNAMOORTHI Avl



V.KRISHNAMOORTHY
Managing Trustee

# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

## 2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"

**16.10.2019** அன்று **சர்வதேச உணவு தினம்** கடைபிடிக்கப்பட்டதை யொட்டி **நம்ம தர்மசாலா**வில் தங்கியுள்ள ஏழை புற்றுநோயாளிகளுக்கு விருந்து உணவு வழங்கப்பட்டது. வாசகர்களே! இவ்வுலகில் உணவின்றி ஒருவரும் இருக்கக்கூடாது என நாம் அனைவரும் உறுதிமொழி ஏற்க வேண்டிய காலம் இது. நம்ம தர்மசாலாவிற்கு ஒருமுறை விஜயம் செய்து ஏழை புற்றுநோயாளிகள் எவ்வாறு பராமரிக்கப்படுகிறார்கள் என்பதை அறிந்துகொண்டு பின்னர் உங்கள் உதவியை செய்யுங்கள். இறைவன் திருப் பணிக்கு நிகரான இத்திருப்பணிக்கு என்றென்றும் உங்கள் ஆதரவு தேவை...!

### இதயம் தொடும் கருணையின் மறு வடிவம்



எழுத்து உலகம் வியந்து போற்றும் "தமிழ் எழுத்தாளர்"

திருமதி **சிவசங்கரி** அவர்கள்

தனது 77வது பிறந்தநாளை "பொருள் பொதிந்த" நன்னாளாக கொண்டாடும் விதமாக பல தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கி மகிழ்ந்தார்கள். அவற்றுள் ஏழை புற்றுநோயாளிகளுக் காக செயல்படும் நம்முடைய **ஸ்ரீ மாதா டிரஸ்டும்** ஒன்று. திருமதி சிவசங்கரி அவர்கள் நூறாண்டுகள் கடந்து நல்ல ஆரோக்கியத்துடன் வாழ ஏழை புற்று நோயாளிகளின் சார்பில் ஸ்ரீ மாதா டிரஸ்ட் இறைவனை ப்ரார்த்திக்கிறது.

### மனிதநேயம் போற்றும் மாதரசியர்



"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்னும் வள்ளுவரின் வாக்கிற்கு நிகழ்கால அடையாளமாய், இளைய தலைமுறை யினருக்கு வழிகாட்டியாய் திகழும் "ஸ்ரீ குருக்ருபா" வேதா மாமி மற்றும் அவரது தோழியர்கள் வழக்கம் போல் ஏழை புற்றுநோயாளிகளுக்கு தீபாவளி புத்தா டைகளை நன்கொடையாக நம்மிடம் வழங்கி மகிழ்ந்தனர். *ஆத்மார்த்தமான அன்பினால் எளியோரை அரவணைக்கும் இந்த நல்ல உள்ளங்களை எண்ணி ஸ்ரீ மாதா டிரஸ்ட் பெருமிதம் கொள்கிறது.*

**இறைவன் அருளால் இவர்களது நற்பணி தடையின்றி தொடர வேண்டும்.**



ஏழை புற்றுநோயாளிகளின் தாய்வீடாக திகழும் நம்ம தர்மசாலாவில், தீபாவளியை முன்னிட்டு அனைத்து ஏழை புற்றுநோயாளிகளுக்கும், துணையிருப்பவர்களுக்கும் சேலை, லுங்கி, பலகாரங்கள் மற்றும் செலவுக்கு பணம் ஆகியன வழங்கப்பட்டது.







இந்த "நம்ம தர்மசாலா" என் தாய் வீடு; ஐயா நீங்கள் எனக்கு அப்பா; உங்களைப் பார்த்தாலே எனக்கு நிம்மதி கிடைக்கிறது!!

இவை இந்த ஏழை உள்ளத்தின் வெளிப்பாடு!

### தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்...

ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
ரூ.25,000/- நிதியளித்து ஒரு நாள் "**நம்ம தர்மசாலா**"வின் செலவினை ஏற்கலாம்
ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம் அல்லது
ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / CASH / M.O.
Account Name: SRI MATHA TRUST | Bank Name: INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20.
Current A/c No.: 163502000001090 | IFSC Code: IOBA0001635

Donations to our Trust is exempted U/S.80 (G) of the Income Tax Act.
After doing this benevolent act kindly SMS your postal mailing address or kindly e-mail the donation details to enable us send our receipt.

Admin Office: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, [Opp. to Thirukkural Unavagam] Adyar, Chennai - 600 020.
Tel: (044) 2442 0727 / (044) 4266 1687 Mobile: 9444001065 / 9381020727 9003247857 Email : vkrishnamoorthy.smt@gmail.com

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar, Adjacent to IIT Compound, Off:Pallipattu Main Road, Chennai-113. Tel: 044 - 4509 8647

Regd. Office: 'NATHA KAMALAM' 1-A, Periyazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059.



*12.10.2019 ஊரப்பாக்கம் : ஸ்வாமிகளுக்கு வரவேற்பு*



*13.10.2019 ஊரப்பாக்கம் : அந்தணர் சங்கமம்*



*15.10.2019 நங்கநல்லூர் : கொலுப்போட்டி*



**ராஜலட்சுமி கல்யாண மண்டபம்**

*வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,*
*சென்னை - 600 042.*




- *800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.*
- *சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.*
- *உறவினர்கள் தங்க - குளிரூட்டப்பட்ட அறைகள்.*
- *விசாலமான கார் பார்க்கிங்.*
- *வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.*
- *நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.*
- *24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.*

தொடர்புக்கு

***48625585 / 9840545585***

ஸ்ரீ குருப்யோ நம:
தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

சிவ சிவ
ராம் ராம்

ஜய ஜய சங்கர
ஹர ஹர சங்கர



ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்ய பரம்பராகத மூலாம்னாய சர்வக்ஞபீடம்

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் அருளாக்ஞைப்படி இயங்கும்

## ஸ்ரீ சங்கர மடம் - ஸ்ரீ மடம் சமஸ்தானத்தின்

ஆன்மிக, தேசிய, கலாச்சார, சமய - சமூக தன்னார்வ சேவை ஸ்தாபனம்

## ஹிந்து சமய மன்றம் (1972) / ஜன கல்யாண் - மாடம்பாக்கம் (1988)

150, 6-வது தெரு, மல்லீஸ்வரி நகர், மாடம்பாக்கம், சென்னை - 600 126.
தொலைபேசி: 22291459 / 9840588593 / 7397243026 (ராம் ராம் சுந்தரராம்)
9677239848 (சாய்ராம்) / 98401057277 (V. பிரகாஷ்) / 9841745779 (V.C. ஸ்ரீகாந்த்)
9445714499 (K. சங்கரன்)

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் பொற்பாத கமலங்களில் குருவந்தனம்

ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளின் அருளாக்ஞைக்கேற்ப ஸ்ரீமடம் சேவைகளுடன், **இதர சில முக்கிய நேரிடையான மற்றும் இதர சத்சங்கங்களுடன் இணைந்த [ஒருங்கிணைப்பு] நற்பணிகள் : கல்வியில் உதவி [வித்யா விருக்ஷம்].** புராதன திருக்கோயில் திருப்பணி – திருவிழாவில் சேவை, உழவாரப்பணி. ரத்ததானம் – கண்தானம் முகாம்கள்–பிரச்சாரம். அனாதைப் ப்ரேத சம்ஸ்காரம், இயற்கை பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இயன்ற உதவி. **மாதர்களின் திருவிளக்கு கூட்டு வழிபாடு. ஆன்மீக விழிப்புணர்வு பிரசுரங்கள். ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் உன்னதமான பிடி அரிசித் திட்டம் / அன்னதானம். சாதுர்மாஸ்ய விரத காலத்தில் வருடந்தோறும் ஸ்ரீ ஆசார்யாளுக்கு [சமஷ்டி] பிக்ஷாவந்தனம். சமஷ்டி உபநயன கைங்கர்யம்.** அபரகாரியங்களுக்கான ஞானவாபி–ஜனார்த்தனம். கறவையற்ற பசுக்களின் பாதுகாப்பு – கோ சாலை. வேத சம்ரக்ஷணம்–வேதபாடசாலை – மேற்படி சேவைகள் தொய்வின்றி சிறப்புடன் தொடர, மனமுவந்து தங்களது தாராளமான நன்கொடையினை **'JANA KALYAN MADAMPAKKAM'** பெயருக்கு அனுப்பி வைத்திட, இருகரம் கூப்பி, பணிவன்புடன் பிரார்த்திக்கின்றோம்.

**– ராம் ராம் / ஜன கல்யாண் மாடம்பாக்கம் –**



ஜய ஜய சங்கர! சிவ சிவ! ராம் ராம்! தர்மோ ரக்ஷதி ரக்ஷித : ஹர ஹர சங்கர!

உண்டி (உண்ண உணவு) கொடுத்தோர் உயிர் கொடுத்தோராவர்



# ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் உன்னதமான பல்நோக்கு சமூக நல "பிடி அரிசித் திட்டம்" (அன்னதானம்)



மூலாம்னாய சர்வக்ஞ பீடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ காஞ்சி சங்கர மடத்தின் சேவை ஸ்தாபனமான கிழக்கு தாம்பரம், மாடம்பாக்கம் ஜன கல்யாண் (1988) இயக்கம் தனது தன்னலமற்ற சேவையாளர்கள் சுமார் 100 பேரைக் கொண்டு, 2000 க்கும் மேற்பட்ட (தயையுள்ளத்துடன் மனமுவந்து அளிக்கும்,) ஆன்மீகப் பொதுமக்களிடமிருந்து "பிடி அரிசித் திட்டத்தின்" கீழ், சீரிய முறையில் பிரதி மாதம் முதல் வாரத்தில் அரிசி, பருப்பு மற்றும் நன்கொடை ஆகியவற்றை பெற்றுக் கொள்கிறது.

அப்படிப் பெற்றுக் கொள்ளப்பட்ட அரிசி, பருப்பு, நன்கொடை ஆகியவை பரவலாக பங்கிடப்பட்டு வேத பாடசாலைகள், ஆதரவற்றோர் காப்பகங்கள், முதியோர் இல்லங்கள், புற்றுநோய் மற்றும் தொழுநோய் காப்பகங்கள், தினசரி நிவேதனத்திற்கே சிரமப்படும் ஆலயங்கள், மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள இல்லங்களின் திருமணம் மற்றும் ஆலயங்களின் குடமுழுக்கு வைபவங்களில் பிரசாத விநியோகம் போன்ற பல்வேறு மார்க்கங்களுக்கு உதவிடப்படுகிறது. மேற்படி திட்டத்தின் மூலம் உதவுபவர்கள், "வழங்கும் சிரமம் உணராமல் மன நிறைவு அடைவதும், உதவி பெறுபவர்கள் சிரமங்களிலிருந்து விடுபட்டு பயனடைந்து நன்றியுணர்வு" மிகக் கொண்டு தங்களையும் இதுபோன்ற தன்னார்வ சேவைகளில் ஈடுபடுத்திக் கொள்ள முன்வருவதும் நடைமுறை வாழ்க்கையில் கண்கூடான பேருண்மைகளாகும்.

மேற்படி "பிடி அரிசித் திட்டம்" ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் அவர்களின் மனதில் உதயமான உயரிய சமூக நலத் திட்டம் ஆகும். தினசரி காலை அன்றைய உணவிற்காக கலயத்தில் இடும் அரிசியில் ஒரே ஒரு கைப்பிடி அரிசியைத் தனியே பானையிலோ அல்லது பாத்திரத்திலோ அரிசியுடன் குறைந்தபட்சம் ஒரு ரூபாய் வீதம் போட்டு வைத்து, மாதம் முடிந்ததும், அதனை சேகரித்து அருகிலுள்ள ஆலயத்தில் நிவேதனமாக தயார் செய்யச் சொல்லி, பசியால் வாடுபவர்களுக்கு வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட உயரிய சமூக உணர்வுடன் கூடிய இப்பல்நோக்குத் திட்டத்தில், தற்கால சூழ்நிலைக்கு ஏற்ப, எவ்வித பாகுபாடுமின்றி, பங்குபெறுவோர் தம்மையறியாமல், 'தான்' என்ற 'அகந்தை' மனதில் தோன்றாமல், இதுபோன்ற சேவை உணர்வுள்ள பலருடன் இணைந்து கூட்டு முயற்சியாக அன்னதான தர்ம கைங்கர்யத்தில் ஈடுபட்டு முழு மன நிறைவுடன், அதனால் பயனுற்றோர்களின் மகிழ்வைக்காணும் பேறு பெற்றவர்களாகின்றனர்.

இந்த உயரிய சமூக நல திட்டத்தில் பங்கு பெற விரும்புவோர் குறைந்தபட்சம் 10 பேர் கொண்ட குழுவாக அமைத்துக்கொண்டு, கீழ்க்கண்ட பிடி அரிசித் திட்ட சேவை ஒருங்கிணைப்பாளர்களை அணுகினால், அவர்கள் பகுதிவாரியாக தங்கள் இல்லம் நாடி நேரில் வந்து பெற்றுச் செல்வார்கள். பிடி அரிசித் திட்டத்தின் கீழ் பெறப்படும் அரிசி, பருப்பு, பணம் ஆகியவற்றின் அளவினைப் பொறுத்தே, பிரதிமாதம் விநியோகம் நெறிமுறைப்படுத்தபடுவதால், கொடுப்பவர்கள் தவறாது தாங்கள் நிர்ணயம் செய்த பங்கினை குறைக்காமல் பிரதி மாதம் வழங்கிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**ராம் ராம் சகோதரர்கள், ஜன கல்யாண், 150, 6வது தெரு, மல்லீஸ்வரி நகர்,**
**மாடம்பாக்கம், சென்னை - 600 126. செல் : 98405 88593, 96772 39848**

## மனநிறைவு தரும் சேவைத் தொடர்பு ஒருங்கிணைப்பாளர்கள்

| | |
|---|---|
| 1. **"ராம் ராம்" இரா. ஸாய்ராம்,** யஷ்வந்த் நகர், மாடம்பாக்கம் | **9677239848** (பிரதான ஒருங்கிணைப்பாளர்) |
| 2. **"ராம் ராம்" அ. சுந்தர ராம்,** மல்லீஸ்வரி நகர், மாடம்பாக்கம் | **044-22291459 /9840588593/7397243026** |
| 3. ஸ்ரீமான். S. இராமதாஸ் (Ex.கனரா வங்கி) பத்மாவதி நகர், | 044-22291877 / 9444113984 |
| 4. ஸ்ரீமான். P.M. விஸ்வநாதன், சிட்லபாக்கம், சென்னை - 64. | 9677212924 |
| 5. ஸ்ரீமான். H. கிருஷ்ணமூர்த்தி, மயிலை, சென்னை - 4. | 9444777752 |
| 6. ஸ்ரீமான். ஸ்வாமிநாதன், வேளச்சேரி, சென்னை-42 | 044-22593001 |
| 7. ஸ்ரீமதி. சுமதி, பொழிச்சலூர், சென்னை - 75 | 044-22631868 / 9841168487 |
| 8. ஸ்ரீமான் K. சங்கரன், ராஜகீழ்பாக்கம், சென்னை-73 | 94457 14499 |
| 9. ஸ்ரீமான். சுந்தரேசன், உள்ளகரம் (மடிப்பாக்கம்) நங்கநல்லூர்,செ-61 | 9176474389 |
| 10. ஸ்ரீமான். S.T. ஸ்ரீனிவாசன், செம்பாக்கம், சென்னை - 73. | 9445694259 / 9444215284 |
| 11. ஸ்ரீமான். சங்கரநாராயணன், பாக்யலக்ஷ்மி நகர், சென்னை-126 | 9840119347 |
| 12. ஸ்ரீமான். V. வைதீஸ்வரன், கி. தாம்பரம், சென்னை - 59 | 8056043082 / 9444118620 |
| 13. ஸ்ரீமான். S. லக்ஷ்மி நாராயணன், சென்னை - 64 | 044 - 22234149 / 9791471683 |
| 14. ஸ்ரீமதி. லக்ஷ்மி & ஸ்ரீமான். பாலசுப்ரமணியம், ராஜகீழ்பாக்கம்,செ-73 | 9791133887 / 044-22276917 |
| 15. ஸ்ரீமான் N. சுப்பிரமணியன், சிட்லபாக்கம், சென்னை - 73. | 044-22273578 / 9940584999 |
| 16. ஸ்ரீமதி. உமா & ஸ்ரீமான் நடராஜன், சேலையூர், சென்னை-73 | 044-22395445 / 9962885875 |
| 17. ஸ்ரீமான், K.E. விஸ்வநாதன், குரோம்பேட்டை, சென்னை-44 | 9445739075 |
| 18. ஸ்ரீமான். S. வெங்கடசுப்ரமணியம், சேலையூர், ஸ்ரீராம் நகர் | 9840346830 / 9940651535 |
| 19. ஸ்ரீமான். P.V. கிருஷ்ணமூர்த்தி, மப்பேடு, சென்னை - 126, | 9841322048 |
| 20. ஸ்ரீமான். சந்தான கோபாலன், பள்ளிக்கரணை, சென்னை-100 | 9884048624 / 044 - 22460616 |
| 21. ஸ்ரீமதி. தேவி வீரமணி, சிட்லபாக்கம், சென்னை-64 | 8838260104 |
| 22. ஸ்ரீமான். P.N. சுப்ரமணியன், அடையார், சென்னை-20 | 044-24919909 / 9445230046 (ராதாகிருஷ்ணன்) |
| 23. ஸ்ரீமதி. உஷா மாதவன், பள்ளிக்கரணை, சென்னை-100 | 9442307190 / 044 - 22462432 |
| 24. ஸ்ரீமான். K. வைத்தியநாதன், தரமணி சாலை, சென்னை-42 | 9677245163 |
| 25. ஸ்ரீமான். அனந்த கிருஷ்ணன், செம்பாக்கம், சென்னை-73 | 9445974049 |
| 26. ஸ்ரீமான். பாலகணபதி, கேம்ப்ரோடு, சேலையூர், சென்னை-73 | 9444086987 |



| | |
|---|---|
| 27. ஸ்ரீமதி காயத்ரி, ராஜகீழ்பாக்கம், சென்னை - 73 | 9698375237 / 044 - 22281931 |
| 28. ஸ்ரீமதி சித்ரா சுப்ரமணியம், அசோக்நகர், சென்னை-83 | 044 - 23712145 |
| 29. ஸ்ரீமதி. கமலா வித்யா சங்கர், கி. தாம்பரம், சென்னை-59 | 8754579253 |
| 30. ஸ்ரீமான். ராதாகிருஷ்ணன், கே.கே. நகர், சென்னை-78 | 9884420122 |
| 31. ஸ்ரீமதி. உஷா ஸ்ரீனிவாசன், அம்பத்தூர், சென்னை-53 | 9952014868 |
| 32. ஸ்ரீமான். K. ஸ்ரீனிவாசன், BSNL., சிட்லபாக்கம், சென்னை-64 | 9444971870 |
| 33. ஸ்ரீமான். KBS. மணியன், மாடம்பாக்கம், சென்னை-126 | 9941513659 / 044 - 22200608 |
| 34. ஸ்ரீமான். கண்ணன், ALS நகர், யஷ்வந்த்த் நகர், மாடம்பாக்கம்,செ-126 | 9092032870/ 9566252430 |
| 35. ஸ்ரீமதி ரேவதி நாகராஜன், சென்னை - 73 | 8807229203 |
| 36. ஸ்ரீமான். R. சுரேஷ், கிழக்கு தாம்பரம், சென்னை - 59 | 9444407185 |
| 37. ஸ்ரீமதி இந்திரா ராஜகோபாலன், சேலையூர், சென்னை-73 | 7904909803 |
| 38. ஸ்ரீமதி. காயத்ரி, திருப்போரூர்-603113 | 8056093203 |
| 39. ஸ்ரீமான் ரவி, மேட்டுப்பாளையம், மேற்கு மாம்பலம், செ-3 | 044 - 23700699 / 9444054153 |
| 40. ஸ்ரீமதி. லலிதா கண்ணன், அண்ணா நகர், செ-40 | 9502846592 |
| 41. ஸ்ரீ நாராயணன், சிட்லப்பாக்கம், சென்னை - 64 | 9952976886 |
| 42. ஸ்ரீமான் வேங்கடசுப்பிரமணியம், அண்ணா நகர், சென்னை-40 | 8838511175 |

**அரிசி / பருப்பு / நன்கொடை சேமித்தபிறகு, (தங்களுக்கு அருகாமையிலுள்ள) மேற்கண்டவர்களில் ஒருவரை தொடர்பு கொண்டால், சேகரித்தவற்றை பிரதி மாதம் முதல் வாரத்தில் தவறாமல் நேரில் வந்து பெற்றுச் செல்ல உதவிகரமாக இருக்கும்.**

**சேவையில் இணைந்திடுவீர் ! ஈடில்லா இன்பம் அடைவீர் !!**

---

*மாடம்பாக்கம் ஜனக்கல்யான் (1988) சார்பில் நடக்க உள்ள வருடாந்திர சமஷ்டி உபநயனத்தில் உபநயனம் செய்து கொள்ள விருப்பமுள்ள (15 வயதிற்கு உட்பட்ட) அந்தண சிறுவர்களின் பெற்றோர்கள் 30.11.2019 தேதிக்குள் முழு விபரங்களுடன் கீழ்கண்ட விலாசத்தில் தொடர்புகொள்ள கேட்டுக்கொள்கிறோம்.*

*விலாசம்*

**ராம் ராம் சகோதரர்கள்**

*150, 6வது தெரு, மல்லிஸ்வர் நகர், மாடம்பாக்கம், சென்னை - 126. தொலைபேசி எண் : 98405 88593*

இணையதளம் : ramramasr@gmail.com

# வியக்க வைக்கும் எண்கள்

*கணிதம் என்பது ஒரு ஆழமான கடல். இந்த கணிதத்தின் அடிப்படை அம்சமே ஒன்றிலிருந்து ஒன்பது வரையுள்ள எண்கள்தான். எண்கள் வரிசையில் ஒன்று முதல் 100 வரை விரிவாக பார்ப்போம்.*

**எண் 1-ன் சிறப்பு**

1. ஒன்று என்பது ஒன்பது எண்களில் மதிப்புடைய முதல் எண்ணாகும். பூஜ்யத்திற்கு தனியாக மதிப்பில்லை. அது ஒன்றுடன் சேரும் போது அதன் மதிப்பு அதிகரிக்கிறது.
2. ஏகாந்தத்தை உணர்த்துவது எண் ஒன்று ஆகும்.
3. இறைவன் ஒன்றே என்ற கருத்தை வெளிப்படுத்துவது எண் ஒன்று.
4. சிவன் உமையுடன் சேர்ந்து உமாமஹேஷ்வரர் கோலத்தில் ஒன்றாய் இருக்கிறார்.
5. ஒற்றுமையை உணர்த்தும் எண் ஒன்று
6. எளிமையான எண்ணாக இருப்பது ஒன்று
7. சிறிய குழந்தைகள் முதலில் எழுதப்பழகும்போது எளிதாக எழுதும் எண் ஒன்று ஆகும்.
8. ஆரம்பம் என்பதை உணர்த்தும் எண் ஒன்று
9. ஒன்றேகுலம் ஒருவனே தேவன்
10. எந்த ஒரு எண்ணையும் ஒன்றால் பெருக்கினால் பெறப்படும் விடையானது அவ்வெண்ணுக்கு சமனாகதான் இருக்கும். இன்னும் ஏராளம்

தொகுப்பு : **ஆதித்யன்**

**"வேதாந்த பிரபோதம்" புத்தகம்**

நம் பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸவாமிகள் அருளியது. தற்போது கிரி டிரேடிங் நிறுவனத்தினர் அழகான வடிவத்தில் வெளியிட்டுள்ளார்கள். வேதபாரதி மூலம் பெறுவோர்க்கு சிறப்பு சலுகை உண்டு.

தொடர்புக்கு : **9444445156 / 97909 20672**



# தெரிந்துகொள்வோம்

1. "அத்திவரதர்" நின்றகோலத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தபோது அவருடைய அபய ஹஸ்தத்தின் உள்ளங்கையில் "மாசுச" என்று வைரக்கற்களால் பதிக்கப்பட்டிருந்தது "மாசுச" என்பதின் பொருள் என்ன?
2. பஞ்சபூத ஸ்தலங்களில் தமிழ்நாட்டில் இல்லாதது ஒன்று எங்குள்ளது?
3. "சிவஞான போதம்" என்ற நூலை எழுதியது யார்?
4. மோகத்தைக் கொன்றுவிடு அல்லால் என் மூச்சை நிறுத்திவிடு எனக் கூறியவர் யார்?
5. ஐயப்பனின் அவதார நோக்கம் என்ன?
6. "காடுடைய சுடலைப் பொடிபூசி என் உள்ளம் கவர் கள்வன்" என பாடியவர் யார்?
7. "அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்" எனப் பாடியது யார்?
8. ஸ்ரீசக்கரத்தால் திருவேற்காடு அம்மனின் உக்கிரஹத்தை தணித்தவர் யார்?
9. காயத்ரீ மந்திரம் எந்தத் தெய்வத்தை நோக்கி ஜபிக்கப்படுகிறது?
10. நந்திமகன் தன்னை ஞானக் கொழுந்தினைப் பந்தியில் வைத்தடி போற்றும் சித்தர் யார்?



(விடைகள் 45ம் பக்கம்)

**ஜாதக பரிவர்த்தனைக்கு அணுகவும் :**

எண்.9, பழனி ஆண்டவர் தெரு,
ராதாநகர், குரோம்பேட், சென்னை - 600 044.

| திருமதி. தனலட்சுமி | திருமதி. ராஜலட்சுமி |
| --- | --- |
| 9444140119 | 7092199447 |







# பிரதக்ஷிணம்

“வேதபாரதி செய்திகள்” வாசகர்களை கடந்த பத்து மாதங்களாக மாதம் ஒரு அதிசயம் நிறைந்த கோயிலை “பிரதக்ஷிணம்” வைக்க அழைத்துச் சென்றோம். சிறு உருவம் கொண்ட எறும்பு முதல் பெரிய உருவம் கொண்ட யானை வரை பலவித மிருகங்கள், பறவைகள், பூச்சிகள் என பல உயிரினங்கள் இறைவனை வழிபட்டதாக தமிழகத்தில் ஏராளமான கோயில்கள் உள்ளன. இந்த மாதம் முதல் அப்படிப்பட்ட கோயில்களுக்கு வாசகர்களை அழைத்துக்செல்லவிருக்கிறோம்.

## பிரதிக்ஷிணம் - 12

### திருஆமாத்தூர் (பசுக்கள் வழிபட்ட ஸ்தலம்)



ஆதி காலத்தில் காமதேனு, நந்தி, பசுக்கள் ஆகியவைகள் கொம்புகள் இல்லாமல் படைக்கப் பட்டிருந்தன. அவை தங்களை தாக்கவரும் காட்டு மிருகங்களான சிங்கம், புலி ஆகியவற்றின் தாக்குதலை எதிர்க்க வேண்டி தங்களுக்கு கொம்புகள் வேண்டும் என்று நந்தி தேவரிடம் முறையிட்டன. அவற்றின் கோரிக்கையை ஏற்ற நந்திதேவர் அவற்றிடம் பம்பை நதிக்கரையிலுள்ள வன்னி மரத்தடியில் சுயம்பு மூர்த்தியாக இருக்கும் “அபிராமேஸ்வரர்” என்ற பெயருடன் விளங்கும் சிவபெருமானை வழிபடும்படி கூறினார். அவ்வாறே பசுக்களும் பல வருடங்கள் சிவபெருமானை நோக்கி தவமிருந்து கொம்புகள் பெற்றன. ஆக்கள் என்றால் பசுக்கள். ஆகையினாலேயே இந்த தலம் “ஆமாத்தூர்” என்று பெயர் பெற்றது. இதனையே புராணங்கள் “கோமாதுருபுரம்” என் விவரிக்கின்றன. பசுக்கள் வழிபாடு செய்ததின் அடையாளமாக சுயம்பு லிங்கத்தின் மேல்

பசுவின் கால் குளம்பின் வடு இன்றும் தெரிகிறது.

இத்தலத்தில் சிவன் மற்றும் அம்பாள் கோயில்கள் அமைந்திருப்பதில் ஒரு புதுமை. இரண்டு கோயில்களும் சாலையின் இருபுறமும் எதிரெதிரே தனித்தனி கோபுரங்களுடன் அமைந்துள்ளன. சிவன் கிழக்கை நோக்கியும் அம்பாள் மேற்கை நோக்கியும் இருக்கிறார்கள்.

அம்பிகையின் சந்நிதியின் பிரகாரத்தைச் சுற்றிவந்தால் தென்புறம் ஒரு வட்டப்பாறை தெரியும். வலதுபுறம் வட்டப்பாறை அம்மன் சந்நிதி அமைந்துள்ளது. இராமாயணத்தில் வாலியைக் கொல்வதற்கு முன் இராமபிரானும், சுக்ரீவனும் அனுமன் முன் நட்பு கொண்டபோது இந்த வட்டப்பாறை முன் உடன்பாடு செய்துகொண்டதாக புராண வரலாறு கூறுகிறது. ஊர் மக்களுக்குள் வழக்குகள் வந்தால் அவர்கள் இந்த வட்டப்பாறையின் மீது கைவைத்து சத்தியம் செய்து தங்கள் வழக்குகளை தீர்த்துக்கொள்கிறார்கள். இந்த வட்டப்பாறை முன் பொய்சொல்கிறவர்கள் மீளாத துன்பத்திற்கு ஆளாவார்கள் என்பது ஐதீகம். இந்த வட்டப்பாறை அம்மன் குறித்து ஒரு வரலாறு கூறப்படுகிறது. அது அண்ணன் தம்பிக்கும் இடையே ஏற்பட்ட சொத்து குறித்த கதை.

மூலவர் பெயர் "அபிராமேஸ்வரர்". "அழகியநாதர்" என்றும் அழைக்கப்படுகிறார். இவரை "ஆமாத்தூர் அம்மான்" என்று பாடியிருக்கிறார் திருஞானசம்பந்தர். அம்பாள் பெயர் அழகிய நாயகி, முத்தாம்பிகை. திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோரால் பாடல் பெற்ற ஸ்தலம்.

விழுப்புரம்-திருவண்ணாமலை-செஞ்சி சாலையில் 2 கி.மீ தூரத்தில் "திருவாமாத்தூர்" என்ற பெயர் பலகை உள்ளது. அங்கு இடபுறமாக பிரிந்து செல்லும் பாதையில் 6 கி.மீ சென்றால் இந்த ஸ்தலத்தை அடையலாம்.

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**



# நங்கநல்லூரில் வேதபாரதி நடத்திய சிறப்பு சொற்பொழிவு

நம் வேதபாரதியின் சார்பில் நங்கநல்லூர் ஸ்ரீ அட்சயா மஹாலில் அக்டோபர் 26, 27, 28 ஆகிய நாட்களில் ஸ்ரீ ரமண பாரதி (ஸ்ரீக்ருஷ்ண ஜகந்நாதன் ஜீ) அவர்களின் ஆன்மீக சொற்பொழிவு நிகழ்ந்தது. முதல் நாள் வியாழன் அன்று ஸ்ரீ சாய்பாபா பஜனையுடன் இனிதே தொடங்கிய நிகழ்ச்சியில் வேதபாரதி அமைப்பின் மூத்த உறுப்பினரும், ஆயிரம் பிறை கண்டவருமான ஸ்ரீ பாலகிருஷ்ணன் தம்பதியினர் கௌரவிக்கப்பட்டார்கள். இரண்டாம் நாள் வெள்ளியன்று ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம பாராயணம், மூன்றாம் நாள் புரட்டாசி சனிக்கிழமை ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாமம் ஆகியவையும் சொற்பொழிவுக்கு முன்பாக நடைபெற்றன. ஸ்ரீரமண பாரதி அவர்கள் ஸ்ரீ ரமண பகவானின் நான் யார்? என்ற கருத்தை தொடங்கி ஒரு கரு தாயின் வயிற்றில் எப்படியெல்லாம் உருவாகி மனிதனாய் வெளிவந்து தன் கடமையை தவறாது செய்ய வேண்டும் என்பதை மிக அழகாகவும் ஆழமானதாகவும் கருத்துகளை எளிமையாகவும், இயல்பான நகைச்சுவையுடனும் விளக்கி கூறினார். மாணிக்கவாசகரும், ஆழ்வார்களும், விவேகானந்தரும், பாரதியும் கூறிய செறிவுமிகு கருத்துக்களை இக்காலத்தில் எப்படி கடைபிடிப்பது என்பதை விளக்கினார். ஒருவர் இறந்துபோனால் அவர் தவறிவிட்டார் என்று இயல்பு தமிழில் கூறுகிறோமே அவர் எதைச் செய்யத் தவறினார் என்ற கேள்வியுடன் தொடங்கி, மனிதன் எப்படி தவறாமல் வாழ்வது என்ற வாழ்வியல் சிந்தனை மக்கள் மனதில் பதியும் வண்ணம் விளக்கினார். சொற்பொழிவுக்கு சிறப்பு சேர்க்கும் வண்ணம் வந்திருந்த அனைவரும் கேள்வி ஞானமுடையவராக ரசித்து பாராட்டி கருத்துக்களை உள்வாங்கிச் சென்றது மிக சிறப்பு. இன்றைய சூழலும் சொற்பொழிவின் ஊடே அலசப்பட்டது மிக்க நன்றாக இருந்தது. சொற்பொழிவின் முடிவில் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப் பெற்றது. செவிக்கு இனிமையாக அமைந்த சொற்பொழிவு அனைவரையும் மகிழ்ச்சியுற வைத்து ஒரு மன மாற்றத்தை விதைத்தது என்றே கூறலாம்.

-ஆசிரியர்.

## பழமொழிகளும் அவற்றுக்குண்டான உண்மையான அர்த்தங்களும்

பழமொழி என்பது ஒரு செயலுக்கு அல்லது செய்கைக்கு விளக்கம் தர சொல்லப்பட்டது. அந்தக்காலத்தில் சொல்லப்பட்ட பழமொழிக்குண்டான உண்மையான அர்த்தங்கள் நாளடைவில் மருவி தற்போது ஏதோ அர்த்தங்கள் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட பழமொழிகளின் சரியான விளக்கங்கள் இந்தப்பகுதியில் தொடர்ந்து அளிக்கப்படும்.

**1. நாயைக் கண்டால் கல்லைக் காணோம்**
**கல்லைக் கண்டால் நாயைக் காணோம்**

இந்த பழமொழிக்கு தற்போது சொல்லும் விளக்கம். நாய் இருக்கும்போது அதை அடிக்க கல் காண்பதில்லை. கல் இருக்கும் இடத்தில் நாய் வருவதில்லை.

**உண்மையான பொருள்**

ஒரு சிற்பி ஒரு வீட்டின் முகப்பில் கருங்கல்லில் ஒரு நாய் சிற்பம் செதுக்கி வைத்திருந்தான். புதிதாக வந்த ஒருவர் தொடக்கத்தில் அது நிஜமான நாய் என்று நினைத்து மயங்கி நின்றார். அறிவு தெளிந்தபின் அது நாயல்ல, அது ஒரு கல் என்ற உணர்ந்தார். நாய் என்று நினைத்தபோது அது கல் என்று அவருக்கு தெரியவில்லை. அது கல் என்று அறிந்தபோது நாய் இல்லை. நாயும் அதுதான். கல்லும் அதுதான்.

**2. அடி உதவுவதுபோல் அண்ணன் தம்பி உதவுவதில்லை**

இந்த பழமொழிக்கு தற்போது சொல்லும் விளக்கம்
ஒருவனை அடித்தால்தான் அவன் வழிக்கு வருவான்

**உண்மையான பொருள்**

ராமாயணக் கதையைச் சற்று நினைத்துப்பாருங்கள். இங்கு அடி என்பது பாதத்தை, பாதுகையைக் குறிக்கிறது. தசரதனுக்குப்பின் அயோத்தியை ஆள்வதற்கு பாதுகைதான் பயன்பட்டது. அண்ணனாகிய ராமனோ, தம்பியாகிய பரதனோ உதவவில்லை என்பதே இப்பழமொழியின் உண்மையான பொருள்.

**- தொகுப்பு ஆதித்யன்**



**வேதபாரதி சென்னை மற்றும் தருமபுரி சத்சங்கம்**

இணைந்து நடத்தும்

## 3வது வருட அந்தணர் சங்கமம்

நாள் : 17.11.2019 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
இடம் : ஸ்ரீ மீனாட்சி நாராயணா திருமண மண்டபம்
அப்பாவு நகர், தருமபுரி

### நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| சரியாக காலை 10.00 மணி | : வேத கோஷம், குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் |
| 10.30 முதல் 11.30 வரை | : "புனிதர் புரிந்த புதுமை" சிறப்புரை : திருப்பாகை செம்மல் பரமக்குடி ஸ்ரீ சீனிவாசன் அவர்கள் |
| 11.35 முதல் 11.45 வரை | : தேனீர் இடைவேளை |
| 11.45 முதல் 12.15 வரை | : மாத்யானிஹகம் / ப்ரம்ம யஞ்ஞம் |
| 12.15 முதல் 1.00 வரை | : சஷ்டியப்த பூர்த்தி / பீமரதசாந்தி/சதாபிஷேகம் ஆன தம்பதிகளுக்கு வேத பாரதியின் கௌரவிப்பு நிகழ்ச்சி |
| 1.00 முதல் 2.00 வரை | : பிரசாதம் |
| 2.10 முதல் 2.20 வரை | : வேத பாரதி செயல்பாடுகள் குறித்த அறிக்கை |
| 2.25 முதல் 3.30 வரை | : "வைதீக கர்மானுஷ்டானங்களும் உங்கள் குடும்ப க்ஷேமமும்" சிறப்புரை : ஸ்ரீரமண பாரதி க்ருஷ்ண ஜெகந்நாதன் ஜி |
| 3.40 முதல் 4.00 வரை | நிறைவுரை - சாந்தி மந்த்ரம் |

**குறிப்பு: மாத்யாஹ்னிக சமயத்தில் மாத்யாஹ்னிகம், ப்ரம்மஞ்ஞும் சொல்லி தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விருப்பமுள்ளவர்கள் பயன்படுத்திக்கொள்ளவும்.**

தொடர்புக்கு :

**9498805838, 6380945471, 9443055603**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாயா,
ஓம் நமோ நாராயணாயா.

# ஸ்ரீமத் பகவத்கீதை

டி. சூரியநாராயணன் பகுதி - 7



**யுத்த பூமியில் கீதோபதேசம் :**

“கீதோபதேசம்”, அதாவது கீதை + உபதேசம் = கீதோபதேசம்”. இதில் ‘‘உபதேசம்’’ என்பதற்கு பொருள் பார்ப்போம். ஒருவருக்கு நன்மை பயக்கும் என்ற நோக்கத்தில் அளிக்கப்படும் கருத்தை அல்லது ஆலோசனையை “உபதேசம்” என்று கூறலாம். பொதுவாக “உபதேசம்” என்றவுடன் குரு-சிஷ்யர்கள் தான் நம்முடைய நினைவிற்கு வருவார்கள். உபதேசம் கொடுக்க குருவும், அதைப் பெற்றுக்கொள்ள சிஷ்யனும் இல்லாமல் “உபதேசம்” என்பது கிடையாது. குரு சொல்வதை சிஷ்யன் செய்யும்படி விட்டுவிடாமல் குருவும் பக்கத்தில் இருந்து சிஷ்யனுக்கு உதவி செய்ய வேண்டும். பொதுவாக ஒரு அமைதியான இடத்தில்தான் “உபதேசம்’’ செய்வார்கள். அந்த காலத்தில் முனிவர்கள் தங்களுடைய ஆஸ்ரமங்களில் தங்களுடைய சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்தார்கள். இந்தக் காலத்தில் பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் பாடம் (உபதேசம்) சொல்லிக் கொடுப்பதை நாம் பார்க்கிறோம். பிராம்மண குழந்தைகளுக்கு உபநயனம் செய்யும் போது காயத்ரீ மந்திரத்தை உபதேசிப்பார்கள். அப்போது சாஸ்திரிகளும், தந்தையும் பூணூல் போட்டுக்கொள்ளும் சிறுவனுக்கு ஒரு பட்டு வஸ்திரத்திற்குள் இருந்துக்கொண்டு காயத்ரீ மந்திரத்தை சாஸ்திரிகள் உபதேசிக்க, தந்தை அதை தன் காதில் வாங்கிக்கொண்டு தன் மகனின் காதில் ரகசியமாக உபதேசம் செய்வார். ஆனால் பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் மஹாபாரத யுத்தத்தின்போது அர்ஜூனனுக்கு



கீதையை உபதேசம் செய்யும்போது ஆயிரக்கணக்கான சேனைகளின் சப்தத்திற்கு இடையில் யுத்த பூமியில் உபதேசம் செய்கிறார். இது சரியா? என்று கேட்கத் தோன்றும். ஆனால் காரணம் இல்லாமல் பகவான் எதையும் செய்யமாட்டார். அதற்கான காரணம் புராணத்தில் விளக்கப்பட்டுள்ளது.

முன்பாரு காலத்தில் ஒரு அரசன் வாழ்ந்துவந்தான். அவன் தன்னை யாரும் வெல்ல முடியாத பலத்தைப் பெறவேண்டும் என்பதற்காக பிரம்மாவைக்குறித்து ஆயிரம் ஆண்டுகள் கடுமையான தவம் இருந்தான். அவனுடைய தவத்தை மெச்சி பிரம்மா அவன் முன் தோன்றி அவன் விரும்பிய வரத்தை கேட்கும்படி கூறினார். அவனோ “எனக்கு என் உடலோடு ஒட்டிய ஆயிரம் கவசங்கள் வேண்டும். என்னை எவராலும் கொல்லவோ, வெல்லவோ முடியாத அளவிற்கு பலம் வேண்டும். ஆயிரம் ஆண்டுகள் தவம் இருந்துக்கொண்டே என்னிடம் போர் புரிபவர் யாரோ அவர்களால் மட்டுமே எனக்கு மரணம் ஏற்பட வேண்டும்’’ என்ற வரத்தைக் கேட்டு பெற்றான். அவன் தன் உடலில் ஆயிரம் கவசங்கள் வேண்டும் என்று வரம் பெற்றதால் அவனுடைய பெயர் ‘‘ஸஹஸ்ர கவசன்’’ என ஆயிற்று. அவனுடைய இயற்பெயர் யாருக்கும் தெரியாது. இனி நம்மை வெல்ல இப்பூவுலகில் மட்டுமல்ல ஈரேழு பதினான்கு லோகங்களிலும் யாரும் இல்லை என்ற இறுமாப்புடன் வாழ்ந்து எல்லோரையும் வதம் செய்துக்கொண்டிருந்தான். அவனைக் கொல்லவேண்டுமானால் ஒருவர் ஆயிரம் வருடங்கள் தவம் செய்துக்கொண்டே அதே நபர் அவனுடன் யுத்தமும் செய்ய வேண்டும். ஒரே நபரால் தவமும் யுத்தமும் செய்யமுடியாது. அவனுடைய தொல்லை தாங்கமுடியவில்லை. தேவர்கள் எல்லாம் பகவான் மஹாவிஷ்ணுவிடம் சென்று முறையிட்டார்கள். பகவானும் அவர்களை காப்பதாக கூறி “ஸஹஸ்ர கவசனை’’ வதம் செய்ய அவதாரம் எடுத்தார்.

தொடரும்....

**டி.சூரியநாராயணன்**

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

*அத்தியாயம் 2 : மறுபிறப்பு*

## 2.14. இன்னும் சில கேள்விகள் :

*8ம் கேள்வி சென்றமாத தொடர்ச்சி...*

ப்ராயஸ்சித்தத்தின் முழுப்பலன் வெளிப்பட, மூன்று விஷயங்கள் அவசியம் என பகவான் வியாசர் சொல்லுகிறார். அவை, மன ஒரு முனைப்பு, கர்மா செய்வதில் சரியான முறை, தானம் ஆகியவை. நாம் வெற்றி பெறாத சில சமயங்களில் ப்ராரப்தத்தைக் குறைக்க முடியாது என்ற தவறான முடிவுக்கு வரக்கூடாது. தவத்தின் தரத்தையும் அளவையும் நாம் உயர்த்தினால் மட்டும் போதும்.

*“ப்ராரப்தத்தை அனுபவித்தே ஆக வேண்டும். அது தவிர்க்க முடியாது என்ற சொல்லப்படுகிறதே, அதன் பொருளென்ன?*

அதன் பொருள் இதுதான். தவம் செய்யும் போது ஒருவன் சந்திக்கிற சிரமங்களே அந்த அனுபவம்.

*9. ப்ராயஸ்சித்தம் எதுவுமில்லாமல் ப்ராரப்தத்தை அப்படியே அனுபவிப்பதா? அல்லது அதை வெற்றி கொள்வதற்காகச் செய்யப்படும் ப்ராயஸ்சித்தம் மூலமாக சிரமம் அனுபவிப்பதா? எது நன்று?*

அது ஒருவருடைய மனோபாவத்தைப் பொருத்தது. மோட்சத்தை விரும்பும் வைராக்யம் உடையவர்கள் ப்ராரப்தத்தை அப்படியே அனுபவிக்கின்றார்கள். அவர்கள் ப்ராயஸ்சித்தங்களை நாடுவதில்லை. இது ஓர் உயர்ந்த குறிக்கோளுக்காக, கஷ்டங்களை விரும்பி அனுபவிப்பதாகும். எனவே, இதுவே தவமாகும். ஆனால் சாதாரண மக்கள் அவ்வாறு செய்யக் கூடாது. அவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் பல உள்ளன. எனவே, அவர்கள் ப்ராயஸ்சித்தம் செய்து, ப்ராரப்தத்தை வெல்ல வேண்டும். இது துக்கத்தைக் குறைப்பது மட்டுமல்லாமல் இறைநம்பிகைகையை அதிகரிக்கும்.

தொடரும்




# வேதபாரதி (கிளை) திருச்சி

**பத்மம் யோகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்**

திருச்சி

# ஆன்மீக சொற்பொழிவு

**ஸ்ரீ ரமண பாரதி** அவர்கள்

◆ யோகா வகுப்புகள் ◆ போட்டிகள் ◆ சொற்பொழிவு


நாள் : நவம்பர் 8, 9, 10 வெள்ளி, சனி, ஞாயிறு

நேரம் : மாலை 6.00 மணி முதல் 8.30 மணி வரை

இடம் : லட்சுமி கமர்சியல் காலேஜ், நந்திகோவில் தெரு, தெப்பக்குளம், திருச்சி - 2. **செல்: 9443453053**


## 35ம் பக்கத்து கேள்விகளுக்கான பதில்கள்

1. “மாசுச” என்றால் “விசனப்படாதே” அல்லது “வருந்தாதே” என்று பொருள். பகவத் கீதையில் 18ம் அத்தியாயத்தில் 66வது ஸ்லோகத்தில் கடைசியாக வரும் வார்த்தை. பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனுக்கு அளித்த கீதோபதேசத்தின் கடைசி ஸ்லோகம்.
2. காளஹஸ்தியில்
3. மெய்கண்டார்
4. பாரதியார்
5. மஹிஷி சம்ஹாரம்
6. சம்பந்தர்
7. வள்ளலார்
8. ஆதிசங்கரர்
9. சூரியன்
10. திருமூலர்



தொகுப்பு
**பரிதி**

# பீமரத சாந்தி வாழ்த்து

ஏற்றமிகு எழுவது கானும்
**ஸ்ரீமான் சிவராமன் - ஸ்ரீமதி.சுப்புலட்சுமி**
மகத்தில் பிறந்த மகாராஜனே
**முத்து கிருஷ்ண ஐயர் - நாகம்மாள்** தம்பதிக்கோர்
முத்தான மகனாய்ப் பிறந்தவனே!
மதுரையிலே கல்வி பெற்று மத்திய பிரதேசத்திலே
நல்லாசிரியனாய் வேலையைத் தொடர்ந்து
தீராத அறிவு வேட்கையால் மனம் சோராது கணிணி
படித்து உத்தியோகத்தில் உச்சம் தொட்ட
உழைப்பாளியே!
சித்திரைப் பெண்ணாம் சுப்புலட்சுமி எனும் எங்கள்
கலமகளை மணந்த உம்மை எங்கள் வீட்டு
மருமகனாய் பெற்று பெருமிதம் கொண்டோம்
ஏற்றமிகு எழுபதாம் வயதில் எண்ணற்ற சாதனைகள்
வடக்கு நத்தம் முதல் வட அமெரிக்கா வரை
தென் தமிழகம் முதல் தென்னாப்பிரிக்கா வரை
கடின உழைப்பின் இனிய கனிகள்
விடா முயற்சியின் ஈடில்லா வெற்றிகள்
இல்லறமாம் நல்லறம் கண்டு பெருமை தரும்
பேரக்குழந்தைகளுடன் உடல் வலிமையுடனும்
நீண்ட ஆயுளுடனும் என்றென்றும் வாழ
இறைவனை வேண்டி வணங்கி வாழ்த்துப்பெறும்

**இடம் : பூனா**
**நாள் : 18.10.2019**

**சேகர் - உஷா**
**சுந்தர் - தீபா**
**உமா - ராமன்**



உ
ஸ்ரீ குருப்யோ நம:

# வேதபாரதி

**பாரதப் பண்பாட்டு அமைப்பு**

**மற்றும்**

# ஸ்ரீ மஹாமேரு மண்டலி

**இணைத்து நடத்தும்**

# ஆன்மீகச் சொற்பொழிவு

## நிகழ்த்துபவர்: ஸ்ரீ ரமண பாரதி
## ஸ்ரீ க்ருஷ்ண ஜகந்நாதன் ஜி

**நாள் : 29.11.2019, 30.11.2019, 01.12.2019**
**வெள்ளி, சனி, ஞாயிறு**
**நேரம் : மாலை 6.00 மணி**

**இடம்:**
**ஸ்ரீ வேத வ்யாஸ ட்ரஸ்ட்,**
**வி.வி.காலனி, ஆதம்பாக்கம், சென்னை-88.**

***தலைப்பு: 'ஸ்ரீ சங்கர விஜயமும், ஸனாதன தர்மமும்'***

**29.11.2019, வெள்ளி** — **ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம்**
மாலை 5.45 மணி
ஸ்ரீ ராஜவிநாயகர் பக்த மண்டலி,
ஸ்ரீமதி. விஜயலெட்சுமி, திருநாவுக்கரசு - 96771 34514

ஆதம்பாக்கம் நாராயணீய மஹிலா மண்டலி,
ஸ்ரீமதி. சித்ரா ஹரிராமன் - 80561 36031

ஆதம்பாக்கம் சங்கராலய மண்டலி, கேசரி நகர்,
ஸ்ரீமதி. சந்திரிகா நாகராஜன் - 94438 86108

**30.11.2019, சனி** — **ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமம்**
மாலை 5.45 மணி
ஸ்ரீ துர்கா மண்டலி - ஏ.ஜி.எஸ். காலனி - சர்வ மங்கள விநாயகர் கோவில்,
வேளச்சேரி - ஸ்ரீமதி வசந்தா சுப்ரமணியம், 90945 93094

ஸ்ரீ புவனேஸ்வரி ஆலய துர்கா வழிபாட்டுக்குழு - ஆண்டாள் நகர்
ஸ்ரீமதி. தனலெட்சுமி பூபதி - 98843 19923

**01.12.2019, ஞாயிறு** — **ஸ்ரீ சங்கர விஜயம்**
மாலை 5.00 மணி
குழந்தைகள் நிகழ்ச்சி, ஆதம்பாக்கம்

**நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் குழந்தைகளுக்கு பரிகளும், பாராட்டுக்களும் வழங்கப்படும்.**

**6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை உள்ள குழந்தைகளின் ஓவியப்போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி.**

**தலைப்பு: ஸ்ரீ சங்கர விஜயம்**

**பதிவு செய்ய கடைசி நாள்: 25.11.2019**

| | |
|---|---|
| ஓவியப்போட்டி | - 30 நிமிடம் |
| கட்டுரைப்போட்டி | - 30 நிமிடம் |
| பேச்சுப்போட்டி | - 5 நிமிடம் |

*அனுமதி இலவசம்!*
*வருக வருக என அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்!!*

**தொடர்புக்கு: 94434 95950 / 98403 54016 / 94440 60346**

உ

ஸ்ரீ குருப்யோ நம:

# வேதபாரதி

(பாரத பண்பாட்டு அமைப்பு)

எண்.31, சேஷாத்திரிபுரம் 1வது மெயின் ரோடு,
பேபி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042. செல்: 94434 95950

## ஸந்த்யா வந்தன போட்டி - 2019

அன்புடையீர்,

நமஸ்காரங்கள் / ஆசிர்வாதங்கள்

**'வேதபாரதி' மற்றும் 'வேத வ்யாஸ குருகுலம்' - நெமிலிச்சேரி இணைந்து வழங்கும்** ஸந்த்யா வந்தன போட்டி மற்றும் அந்தணர் சங்கமம் நிகழ்ச்சியில் பங்கு பெற அழைக்கிறோம்.

**நாள்: 25.12.2019, புதன்கிழமை, மதியம் 2.00 மணி**

**இடம்: வேத வ்யாஸ குருகுலம் வேதபாடசாலை,**
**பாலசுப்பிரமணியம் தெரு, நெமிலிச்சேரி, குரோம்பேட்டை, சென்னை.**

1. உபநயனம் ஆன அந்தண சிறுவர்கள் கலந்து கொள்ளலாம்.
2. எல்லா ஸாகைகளுக்கும் வேத விற்பன்னர்கள் எழுத்து மூலமாகவும், வாய்மொழியாகவும் பரிட்சை செய்வார்கள்.
3. முன் பதிவு கடைசி நாள் 10.12.2019
4. **பெண் குழந்தைகள் 6ம் வகுப்பிற்கு மேல் உள்ளவர்கள் கீழ்கண்ட போட்டிகளில் கலந்து கொள்ளலாம். யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம்.**

   1. **பேச்சுப்போட்டி - நேரம் 5 மணித்துளிகள்**

      **தலைப்பு: 1. நட்புக்கும் உறவிற்கும் ஆன புரிதல்**
      **2. என் குடும்ப பெருமை**
      **3. முடிவு எடுக்கும் தருணத்தில் யார் துணை**

   2. **விளையாட்டுப் போட்டி: பல்லாங்குழி, தாயம், கயிற்றாட்டம்** (Skipping), **பாண்டி**
   3. **சான்றோர் பெருமக்களின் ஆசிகளுடன் பரிசுகள், சான்றிதழ், பாராட்டுகள் பெற அன்புடன் அழைக்கிறோம்.**

**முன்பதிவிற்கு - 99949 26537, 86674 16781**




**G. SIVAGAMASUNDARI**
**99940 89133**




**N. GURUMURTHY**
**99940 89140**

# SRI SASTHA CATERING



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



**14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.**


# திருக்கோயில் உழவாரப்பணி மன்றம்

14, பாலசுப்ரமணியர் கோயில் தெரு,
லட்சுமி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.

செல்: **9445121080, 7200935145**

ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் மகம் நட்சத்திரத்தை முன்னிட்டு எல்லா மாதமும் வேளச்சேரி **அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலில் திருவாசகம் முற்றோதுதல்** நமது மன்றத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடைபெறும் நாள் **20.11.2019 புதன்கிழமை நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னம்பாலிப்பு நடைபெறும்.** அனைவரும் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

# திருக்கோயில் உழவாரப்பணி

**03.11.2019, ஞாயிற்றுக்கிழமை**
**ஒட்டியம்பாக்கம் (வழி மேடவாக்கம்) கிராமத்தில்**
**அமைந்துள்ள அருள்மிகு மங்களாம்பிகை**
**அம்பாள்** உடனுறை **ஒட்டீஸ்வரர் திருக்கோயிலில்**